
செப்டம்பர் 2004 ரூ. 5.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



## புதியன புகுதல்

## அரசியல் வித்தகர்களா? வில்லன்களா?

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு அடியாள் வேலை செய்யும் லேலண்டு நிறுவனம்

## - கண்டன ஆர்ப்பாட்டம்

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க வல்லரசு இப்போது ஒரு பொம்மையாட்சியை நிறுவி, ஈராக்கை மறுசீரமைப்பது என்ற பெயரில் தனது மறுகாலனிய நாடாக மாற்றியுள்ளது. உலகையே தனது காலடியில் கொண்டு வரத் துடிக்கும் அமெரிக்க மேலாதிக்க வெறியின் ஓர் அங்கம்தான் ஈராக் ஆக்கிரமிப்பு. தனது விசுவாச அடிமை நாடுகளிலிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் கூலிப்படைகளைக் கொண்டு வந்து ஈராக்கிய மக்களை ஒடுக்கிவரும் அமெரிக்க வல்லரசு, ஈராக்கைப் புனரமைப்பது என்ற பெயரில் தனது அடிமை நாடுகளின் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் மூலம் சில கட்டுமானப் பணிகளைச் செய்து, அச்செலவுகளை ஈராக் மீதே சுமத்திக் கொள்ளையடித்து வருகிறது. கைக்கூலி ஐ.நா. மன்றத்தின் ஒப்புதலுடன் நடக்கும் இந்த ஆக்கிரமிப்புக்கு அடியாள் வேலை செய்யக் கிளம்பியுள்ளது, இந்துஜாவின் அசோக் லேலண்டு நிறுவனம்.

ஐ.நா.வின் ''உணவுக்குப் பதிலாக எண்ணெய்'' என்ற திட்டத்தின் கீழ் ஈராக் நாட்டிற்கு 3322 டிரக்குகளை (கார்கோ 912 மாடல்) ஏற்றுமதி செய்வதற்கான இரண்டு ஒப்பந்தங்களை அசோக் லேலண்ட் நிறுவனம் பெற்றுள்ளது. 46 மில்லியன் டாலர் (ஏறத்தாழ 210 கோடி ரூபாய்) மதிப்புடைய இவ்விரு ஒப்பந்தங்களின் படி, ஏற்றுமதி செய்யப்படும் டிரக்குகளை ஈராக்கிய பொம்மை அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சகமும் விவசாயத் துறை அமைச்சகமும் பெற்றுக் கொள்ளும். இந்த டிரக்குகள் வழங்கப்படுவதுடன் உதிரிபாகங்களின் சப்ளை, வாகனங்களின் பராமரிப்பு, சர்வீஸ் பணிமனைகளையும், பயிற்சியளிப்பு உதவிகளையும் லேலண்ட் நிறுவனம் மேற்கொள்ளும்.

இந்த ஒப்பந்தம் லேலண்ட் நிறுவனத்தின் தனிப்பட்ட விவகாரமல்ல; உலக மேலாதிக்க அமெரிக்க வல்லரசுக்கு விசுவாசமாகச் சேவை செய்யும் அடியாள் வேலை தான் இது. ஈராக்கை மீண்டும் காலனியாக்கிச் சூறையாடும் அமெரிக்கக் கொள்ளையில் தமக்கும் சில எலும்புத் துண்டுகளைப் பெறத் துடிக்கும் இந்திய அரசின் கீழ்த்தரமான செயல்தான் இது. மேலும், ஏற்றுமதி செய்யப்படும் டிரக்குகள் சிவிலியன் பயன்பாட்டுக்கு மட்டுமின்றி, அமெரிக்க இராணுவத்தின் பயன்பாட்டுக்கும் மேற்கொள்ளப்படும். அதாவது, லேலண்ட் டிரக்குகளில் அமெரிக்கக் கூட்டணிப் படைகள் வலம்வந்து ஈராக்கிய மக்களைக் கொன்றொழிக்கும்.

''இக்கொலை பாதகச் செயலுக்கு லேலண்ட் தொழிலாளர்கள் துணை போகக் கூடாது; ஈராக்கிய மக்களின் இரத்தத்தில் நாம் வயிறு வளர்க்கக் கூடாது; அமெரிக்க கைக்கூலியான ஈராக்கிய பொம்மை அரசுக்கு லேலண்ட் டிரக்குகளை அனுப்ப 'அனுமதிக்கக் கூடாது'' என்பதை விளக்கி ஓசூர் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, ஓசூரிலுள்ள அசோக் லேலண்ட் நிறுவனத் தொழிலாளர்களிடமும், ஓசூர் தொழிற்பேட்டையிலும் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டது. அனைத்துத் தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்து, லேலண்ட் நிறுவனத்தின் கைக்கூலித்தனத்துக்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த விழைந்தது.

லேலண்ட் நிறுவனத்திலுள்ள குசேலர் தலைமையிலான தொழிற்சங்கமான தொழிலாளர் நல மன்றத்தின் முன்னணியாளர்கள், ''நிர்வாகத்துடன் தொழிற்சங்கங்கள் புதிய ஊதிய ஒப்பந்தம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ள சூழ்நிலையில், இத்தகைய போராட்டங்களை மேற்கொள்ளக்கூடாது'' என்று நழுவிக் கொண்டனர். ''இத்தகைய போராட்டத்தால் எதையும் சாதிக்க முடியாது. நிர்வாகம் மேலும் எரிச்சலடைந்து தொழிலாளர்கள் மீது புதிய சுமைகளைத் திணிக்கவே செய்யும்'' என்று சிலர் பின்வாங்கிக் கொண்டனர். இன்னும் சிலர், ''கம்பெனியில் நடக்கும் அநியாயத்தைக் கேட்பதை விட்டு, எங்கேயோ உள்ள ஈராக்கிற்கு குரல் கொடுப்பதால் ஒரு பயனும் இல்லை'' என்று தமது 'உலகத் தொழிலாளர் வர்க்க ஒற்றுமை உணர்வை'ப் போட்டு உடைத்தனர்.

இப்படி பல்வேறு சங்கத்தினரும் தமது தொழிற்சங்க பிழைப்புவாதத்தில் மூழ்கிக் கிடந்த போதிலும், வர்க்க உணர்வும் ஜனநாயக உணர்வுமிக்க தொழிலாளர்கள் பு.ஜ.தொ.மு.வின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தனர். பு.ஜ.தொ.மு.வின் போராட்ட அறிவிப்பானது, தொழிலாளர்களிடையே விவாதத்தை எழுப்பி, அரசியல் உணர்வும் வர்க்க உணர்வும் பெறத் தூண்டுகோலாக அமைந்தது.

திட்டமிட்டபடி 11.8.04 அன்று மாலை 4 மணியளவில் ஓசூர் - அசோக் லேலண்டு-I ஆலைய ருகே, ''லேலண்டு நிறுவனமே, அமெரிக்கக் கைக்கூலி ஈராக் பொம்மை அரசுக்கு இராணுவ டிரக்குகளை அனுப்பாதே! ஏற்றுமதி ஒப்பந்தங்களை ரத்து செய்! தொழிலாளர்களே, ஈராக் மக்களைக் கொன்றொழிக்கும் அடியாள் வேலைக்குத் துணை போகாதீர்கள்!'' என்ற முழக்கங்களுடன் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை பு.ஜ.தொ.மு. நடத்தியது. ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய தோழர்கள், தொழிலாளர்களிடையே நிலவும் குறுகிய பொருளாதாரவாதப் போக்கை அம்பலப்படுத்தியதோடு, உலகமயமாக்கலின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளையும் விளக்கினர்.




தகவல்: பு.ஜ.தொ.மு., ஓசூர்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 19**

**இதழ் 11**

**செப்டம்பர் 2004**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**



**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை-600 024.**


# புதியன புகுதல்

## அரசியல் வித்தகர்களா? வில்லன்களா?

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கு காலக் கிரமப்படி இன்னும் இரு பது மாதங்களுக்கு மேல் அவகாசம் இருக்கிறது. ஆனால், கடந்த மே மாதம் நாடாளு மன்றம் பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்து, கருணாநிதியின் தி.மு.க. அணியின் செல்வாக்குமிக்க ஆட்சி மத்தியில் அமைந்தவுடனே பல்வேறு வதந்திகளும் ஊகங்க ளும், கிசுகிசுக்களும் கிளம்பத் தொடங்கி விட்டன. தமிழகத்தில் ஜெயலலிதா தலை மையிலான ஆட்சி கலைக்கப்படும், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்கள் முன் கூட்டியே நடத்தப்படும் என்ற பரபரப்புச் செய்தி தொடர்ந்து பரப்பப்படுகின்றது.

வரும் சட்டப்பேரவைத் தேர்தல்களுக்குப் பிறகு ஜெயா - சசி கும்பல் எவ்வளவு தான் எத்தணித்தாலும் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாது என்பது உறுதியாகி விட்டது. ராஜீவ் கொலை, கோவை குண்டு வெடிப்புகள் போன்ற அரசியல் விபத்துகள் ஏதா வது நடந்து, அது ஜெயா - சசி கும்பலுக்குச் சாதகமாக அமையாவிட்டால் அக்கும் பலை எந்தச் சக்தியாலும் காப்பாற்றவே முடியாது. அதோடு அது அரசியல் அரங்கில் இருந்தே மறைந்து போய்விடுவதற்கான வாய்ப்புகளும் பிரகாசமாகவே இருக்கின் றன.

இவையெல்லாம் எப்படிப் போனாலும் சரி, ஒன்றுமட்டும் நிச்சயமாகி விட்டது என்றே கூறலாம். எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் அதன்பிறகும் ஒரு புதிய தலைமுறை அரசியல்வாதிகளை எதிர்கொள்வதற்கு தமிழ்நாடு தயாராகிவிட வேண்டும்.

ஏற்கெனவே, அரசியலில் ஆதிக்கம் செலுத்திவரும் ஜெயலலிதா - கருணாநிதி தலைமையிலான திராவிட அரசியலைப் பார்த்தாகி விட்டது; காங்கிரசு - பாரதிய ஜனதா தலைமையிலான ''தேசிய'' அரசியலையும் பார்த்தாகி விட்டது; ஒன்றும் சரி யில்லை, முற்றிலும் ஒரு புதிய (தலைமுறை) அரசியல் சக்திகள் வரவேண்டும் என்று பலரும் சொல்லக் கேட்கிறோம். பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடி யாதது, அவசியமானதுதான். ஆனால், தற்போது தமிழக அரசியலில் ஆதிக்கத்துக்கு வரும் புதிய தலைமுறையானது, கருணாநிதி, ஜெயலலிதா, காங்கிரசு அல்லது பா.ஜ.க. தலைமையை விட மிக மோசமான இழிந்த, சந்தர்ப்பவாத, பிழைப்புவாத, கிரிமினல்மயமானதாகவே இருக்கும் என்று இவர்களின் முகவிலாசங்கள் கூறுகின் றன.

தற்போது தலையெடுத்திருக்கும் புதிய தலைமுறை அரசியல்வாதிகளில் குறிப்பி டத்தக்கவர்களாக, ஸ்டாலின் — தயாநிதி இணை, அன்புமணி, வாசன், திருமாவள வன் - கிருஷ்ணசாமி ஆகியோர் உள்ளனர். இவர்கள் தவிர வைகோவின் மகன் துரை வையாபுரி, ப. சிதம்பரத்தின் மகன் கார்த்திக் சிதம்பரம் போன்ற ஒரு சிலரும் அரசிய லில் குதிப்பதற்கான ஆழம் பார்க்கும் வேலையில் இறங்கியுள்ளனர்.

இவர்கள் எல்லோருமே தற்போதுதான் அரசியலில் நுழைகிறார்கள் என்று கூறி விட முடியாது. ஸ்டாலின் அரசியலில் அடியெடுத்து வைத்து ஒரு இருபது ஆண்டு களாகி விட்டன. திருமாவளவனும், கிருஷ்ணசாமியும் அரசியலில் குதித்து ஒரு பத் தாண்டுகளாவது ஆகின்றன; வாசனுக்கு ஒரு ஐந்தாண்டு கழிந்து விட்டது. என்றாலும் பழைய தலைமுறை அரசியல்வாதிகள் செயலூக்க அரசியலில் இருந்து விலகிக் கொள்ள, இவர்கள் இப்போது அரங்கின் முன்வரிசையைப் பிடித்துக் கொள்ளப் போகிறார்கள். வைகோ, இராமதாசு, சிதம்பரம், நல்லக்கண்ணு ஆகியோர் ஒரு இடைக்கால ஏற்பாடாக அரசியலில் கொஞ்சநாள் காட்சியளித்துக் கொண்டிருக்க லாம்; ஆனால் இவர்களும் மங்கிப் போய்விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

அண்ணன் கருணாநிதி எப்போது திண்ணையைக் காலி செய்வார், அந்த இடத் தைப் பிடித்துக் கொள்ளலாம் என்று இலவு காத்த கிளியாக வைகோ காத்திருக்கிறார். ஆனால், இதற்கு இடந்தரக் கூடாது என்பதால், தி.மு.க. தலைமைக்கு ஸ்டாலினை அமர்த்துவதை நெருடலின்றி, தடையின்றி நடத்தி விடுவதில் குறியாக இருக்கிறார், கருணாநிதி.


வாசன், தயாநிதி, அன்புமணியைப் போல ஒருநாள் இரவில் திடீரென்று அரசிய லில் குதித்து பதவி - அதிகாரத்துக்கு வந்தவரல்ல ஸ்டாலின் என்பது உண்மைதான். ''தானுண்டு, தன் வேலையுண்டு என்று ஒதுங்கியிருந்த ஸ்டாலினை அவசரநிலை ஆட்சியின்போது மிசாவில் கைது செய்து, சிறையிலடைத்து சித்திரவதை செய்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

இதன் மூலம் அரசியலுக்கு இழுத்து வரப்பட்டார்'' என்று கருணாநிதி அடிக்கடி நியாயங்கற்பிப்பதுண்டு. நாட்டில் எவ்வளவோ இளைஞர்கள் தகுதியுடையவர்களாக இருந்தாலும், இளவரசருக்கு மட்டும்தான் அரசாட்சி நடத்துவதற்குத் ''தேவை'' யான பயிற்சிகள், வசதி வாய்ப்புகள், பரிவாரங்களை வைத்து - அரசகுருவை வைத்து செய்துத் தரப்படுகின்றன. அப்படித்தான் ஸ்டாலினுக்கும் அரசியல் தலைமையை நிறுவுவதற்கான வாய்ப்புகள் திட்டமிட்டு ஏற்படுத்தித் தரப்பட்டன.

எனவேதான், மு.க.முத்துவை சினிமாவில் புகுத்தி, பிரபலமாக்கித் தனது அரசியல் வாரிசாக்கும் முயற்சியில் கசப்பான அனுபவத்தைப் பெற்ற கருணாநிதி, ஸ்டாலினைத் திட்டமிட்டு, கவனமாக, படிப்படியாக அரசியலில் வளர்த்தெடுத்தார். இளைஞர் அணித் தலைவராகவும், சட்டப்பேரவை உறுப்பினராகவும், சென்னை மாநகர மேயராகவும், தற்போது கழக இணைப் பொதுச் செயலாளராகவும் உயர்த்தினார். விருதுநகர், விழுப்புரம் என்று ஒவ்வொரு மாநாட்டிலும் ஸ்டாலினுடைய முக்கியத்துவத்தை கூட்டிக் கொண்டே வந்து கடைசியாக சேலத்தில் கருணாநிதியும் அன்பழகனும் தாம் ஓய்வு பெற்று, ஸ்டாலினுக்கு பட்டம் சூட்டப் போவதை மறைமுகமாக அறிவித்தனர்.



வாரிசு அரசியலில் இட ஒதுக்கீடு:
கருணாநிதிக்கு இரண்டு; ராமதாசுக்கு ஒன்று.

இருபதாண்டுகளுக்கு முன்பு நட்ட விழுது, வேர் பிடித்து வளர்ந்து தன் காலிலேயே நிற்கும் ஆலமரமாக நிற்பதைக் கண்டு களிக்கிறார், கருணாநிதி. இளைஞரணித் தலைவர் என்ற முறையில் தனது வளர்ச்சியோடு ஒரு புதிய தலைமுறை அணிவரிசையை எல்லா மட்டங்களிலும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார், ஸ்டாலின். வைகோ, அழகிரி போன்ற போட்டியாளர்கள் கனவு காண்பதைப் போல இந்த மரத்தை அவ்வளவு எளிதில் வீழ்த்திவிட முடியாது.

தற்போது தமிழகம் எதிர்கொள்ளவிருக்கும் புதிய தலைமுறை அரசியல்வாதிகளில் திருமாவளவன் - கிருஷ்ணசாமியைத் தவிர பெரும்பாலானவர்களோ ஏறக்குறைய அனைவருமோ அரசியல் வாரிசுகளாக வந்தவர்கள். இவர்களின் பின்பலமாக, அடுத்தடுத்த மட்ட அரசியல் அணிகளும் அப்படிப் பட்டவர்களாகவே உள்ளனர். கட்டிக் கொடுக்கப்பட்ட சோற்று மூட்டையுடன் அரசியல் பயணம் புறப்பட்டிருக்கிறார்கள்.

ஸ்டாலினைப் போல வாசன், தயாநிதி, அன்புமணி ஆகியோரின் அரசியல் நுழைவுக்கு நீண்டகால முயற்சிகள் தேவையாக இருக்கவில்லை. உண்மையில் இவர்கள் கட்சியிலும் பதவிகளிலும் திணிக்கப்பட்டார்கள். அதிலும் வாசனை விட மற்ற இருவரும் அதிரடியாக வந்து கட்சி மற்றும் பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

காந்தி, நேரு, காமராசர் காலத்திய பாரம்பரிய உரிமை பாராட்டும் தலைவர்கள் யாரும் காங்கிரசில் இல்லை. குழுச் சண்டைகளால் நிரம்பி வழியும் மாநில காங்கிரசில் மக்களை ஈர்க்கும் அளவுக்கு அடையாளங் காட்டக்கூடிய யாரும் உருவாகாத நிலையில் புதிய தலைமுறை அரசியல் தலைமைக்கான வாய்ப்பு திறந்தே கிடந்தது.

காங்கிரசில் இருந்து பிரிந்து, தனித்து இயங்கிய தமிழ் மாநில காங்கிரசு மூப்பனார் மரணத்துக்குப் பிறகு, அவரது மகனான வாசனை அரசியல் வாரிசாகக் கண்டெடுத்தது த.மா.கா. காங்கிரசுடன் இணைத்ததற்கு விலையாக - ஈடாக தமிழ்நாடு காங்கிரசின் தலைமையாக வாசன் முன்நிறுத்தப்படுகிறார். இவ்வாறு புறக்கடை வழியே, தமிழகக் காங்கிரசின் தலைமைக்கு வாரிசு உரிமை வழியே வந்தவர்தான் வாசன்.

ஒரேநாள் பங்குச் சந்தையில் ஏராளமான பங்குகளை வாங்கிக் குவித்து விடுவதன் மூலம் ஒரு தொழில் குழுமத்தின் (தொழில் நிறுவனத்தின்) இயக்குநர் குழுவில் தனது ஆதிக்கத்தையும் தலைமையையும் கைப்பற்றி விடும் தொழில் அதிபரைப் போல, கருணாநிதியின் பேரன், ஸ்டாலினின் மருமகன், முரசொலி மாறனின் மகன் என்பதை வைத்து கழக உறுப்பினருக்கான அட்டைக் கூட இல்லாமல், திடீரென்று அரசியலில் குதித்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் மைய அரசில் தனது தொழில்சார்ந்த துறையின் ''காபினட்'' அமைச்சருமாகிவிட்டார் தயாநிதி மாறன். ஸ்டாலின் விவகாரத்தில் நிர்பந்தம், கடும் முயற்சி, உழைப்பு, அனுபவம் என்றெல்லாம் கூறி நியாயப்படுத்தும் கருணாநிதி, தயாநிதி விவகாரத்தில் மொட்டையாக, திறமைமிக்கவர் என்றும் பிற மாநிலங்களில் அரசியல் தலைவர்களின் வாரிசுகள் அரசியலில் நுழைவதையும் எடுத்துக்காட்டுகளாகக் கூறுகிறார்.

தயாநிதி மாறனாவது தேர்தலில் போட்டியிட்டு மக்களைச் சந்தித்து, ''ஆதரவு திரட்டி'' பதவிகளைப் பிடித்தார். அன்புமணியோ இவை எதுவும் செய்யாது, அவரது தந்தை பா.ம.க. ராமதாசின் சதி - சூழ்ச்சி - கபடநாடகத்தாலேயே பதவிகளில் இருத்தி வைக்கப்பட்டிருக்கிறார். ஒடுக்கப்பட்ட - மிகவும் பின்தங்கிய வன்னிய சமுதாயத்தின் இரட்சகனாகத் தோன்றி, போர்க் குணமும், நேர்மையும், துணிவும், தூய்மையும், தியாகமும் மிக்க தலைவனாகத் தன்னைத்தானே முதலில் முன்னிறுத்திக் கொண்டார் இராமதாசு. போகப் போக இந்தப் பண்புகளுக்கு நேரெதிரானவரென்று தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.

கட்சி அமைப்புப் பதவிகளுக்கோ, அரசியல் அதிகாரப் பதவிகளுக்கோ தானோ, தனது குடும்ப உறுப்பினர்களோ ஒருபோதும் வரமாட்டோம்; இயக்க வேலைகளுக்கான செலவுகள் எதையும் அமைப்பிடம் இருந்து பெற மாட்டேன்; சொந்தப் பணத்தைக் கொண்டே செய்வேன் என்றெல்லாம் சுயகட்டுப்பாடுள்ள சத்தியசீலனைப்

www.padippakam.com

போல பேசிவந்தார். இந்த உறுதிமொழி களில் இருந்து தவறினால் முச்சந்தியில் நிறுத்தி சவுக்கால் அடிக்கும்படி மக்களி டம் வேண்டினார்.

அதிகாரபூர்வமாக இராமதாசு கட்சித் தலைவராகவில்லை; சிவசேனா பால்தாக்கரேயைப் போல கட்சி அமைப்புகள் அனைத்துக்கும் மேலான நிறுவனத் தலைவராகி, அனைத்தையும் தீர்மானிக்கும் சர்வாதிகாரியானார். தனது கட்சி - சாதி அமைப்புக்குள் சொந்தச் செல்வாக்குள்ள தலைவர்கள் எவருமே இருக்கக் கூடாது என்று பல சூழ்ச்சிகள் - தாக்குதல்கள் நடத்தி, தனது கொத்தடிமை விசுவாசிகள் தவிர அனைவரையும் விரட்டினார். சாதி - கட்சி அமைப்புகளின் பதவிகளுக்கு தானும், தனது மகன், மருமகள், மனைவி மற்றும் நெருங்கிய உறவினர்களையே நியமித்தார். தனது உறவினர்களையே பெரும்பாலும் அரசியல் பதவிகளில் நியமித்தார். நிர்பந்தம் காரணமாக பிறரை நியமித்தாலும், தனது உறவினர்களைக் கொண்டு கண்காணித்து, அவர்களை தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்தார்.




தி.மு.க.வின் பட்டத்து இளவரசர்கள்.

சொந்தப் பணத்தை மட்டுமே வைத்து கட்சி - இயக்கப் பணிகள் செய்யப் போவதாக சத்தியம் செய்த ராமதாசு, எப்படிக் கோடி கோடியாக சொத்து - பணத்தைக் குவித்தார் என்பதை அவரது அரசியல் கூட்டாளியாக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தி தனிக் குறு நூலாகவே வெளியிட்டுள்ளார். பாண்டிச்சேரியைச் சேர்ந்த இரு வன்னிய இளைஞர்கள் தொடங்கிய பசுமைத் தாயகம் என்ற தன்னார்வ அமைப்பைக் கைப்பற்றி, அன்புமணியை அதன் தலைவராக்கி அதன் மூலமே சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சேவைக்கென்ற வெளிநாட்டு உதவித் தொகை பெற்றார். அதோடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் தொழிலதிபர்களை மிரட்டியும் வசூல் செய்தார் என்ற குற்றச்சாட்டுகளும் உண்டு.

கடைசியில், பசுமை தாயகம் மூலம் ஆற்றிய ''பணி''களையே அன்புமணியின் பொதுநலச் சேவையென்று ஆதாரமாகக் காட்டி, அவர் கட்சியிலும் அரசியலிலும் பதவி பெற்றதை நியாயப்படுத்துகின்றார். இப்போது அன்புமணிக்கு எம்.பி. பதவி, மந்திரி பதவி பெற்றுத் தருவதில் கருணாநிதி செய்ததைப் போல, உதவி செய்வதில் வாக்குறுதி தவறினார் என்பதற்காகவே ஜெயலலிதாவுடனான கூட்டை முன்பு முறித்துக் கொண்டார். தனது மகனை அரசியல் வாரிசாக்கும் நோக்கத்துடனே பக்கத்து இலைக்குப் பாயசம் கேட்பதைப் போல ஸ்டாலினுக்குப் பதவி அளிக்கும்படி ராமதாசு கோரி வந்தார்.

திருமாவளவன், கிருஷ்ணசாமி ஆகியோரை மற்றபிற புதிய தலைமுறை அரசியல்வாதிகளுடன் இணை வைத்துப் பேச முடியாது. இவர்கள் மற்றவர்களைப் போல யாருடைய அரசியல் வாரிசுகளாகவும் மேலிருந்து திடீரென்று திணிக்கப்பட்டவர்கள் அல்ல. தன் முயற்சியால் அடித்தள மக்களிடையே அரசியல் அணிதிரட்டலைச் செய்து, அதற்காகத் தடைகள் பல கடந்து, கடினப்பட்டு முன்னேறியவர்கள்; தமக்கென அம்பேத்கரியம், பெரியாரியம் என்ற அரசியல் - சமூகக் கண்ணோட்டம், இலட்சியம் கொண்டவர்கள் என்றெல்லாம், ''முற்போக்கு அரசியல் முகாமில்'' அடையாளம் காணப்படுபவர்கள்.

இதெல்லாம் ஓரளவு உண்மைகள்தாம். ஆனால் முழுவதும் அல்ல; ஓரளவுக்குத்தான். மற்றவர்களுக்கும் திருமாவளவன், கிருஷ்ணசாமிக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பதைப் போலவே இணை வைத்துப் பேசுமளவிற்கு அடிப்படையில் ஒற்றுமைகளும் இருக்கின்றன.

கிருஷ்ணசாமி ஒரு வாரிசு அரசியல்வாதி இல்லையென்றாலும், ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களால் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டு முன்னிறுத்தப்பட்டவர் என்பது மறுக்க முடியாத உண்மை. திருமாவளவன் அரசியலில் கால்பதித்த பிறகு, ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களால் அரவணைத்துக் கொள்ளப்பட்டவர். அம்பேத்கரியம் - பெரியாரியம் ஆகிய அரசியல் சமூகத் தத்துவம் பேசினாலும் ஓட்டுக் கட்சி அரசியலுக்குள் புகுந்தபிறகு இருவருமே அரசியல் சந்தர்ப்பவாதத்தையும் பிழைப்புவாதத்தையும் வரித்துக் கொண்டார்கள். அடித்தள மக்களை அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களை அப்படியே ஓட்டு வங்கிகளாக மாற்றி, பிற ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளுடன் சரணடைந்து, சமரசம் பேசி, பேரங்கள் நடத்தி பதவிகளைப் பெறுவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள்.

புதியது என்றாலே வரவேற்பும் ஒருவித எதிர்பார்ப்பும் இருக்கத்தான் செய்யும். அதுவும் அனைத்துத் துறைகளிலும் பழைய அரசியல்வாதிகள் தோல்வியுற்ற பிறகு வரும் புதிய தலைமுறை எப்படியாவது, ஏதாவது நல்லது செய்ய மாட்டார்களா என்ற ஏக்கம் - எதிர்பார்ப்பு பொது மக்களிடம் இருக்கிறது. ஆனால், எல்லாம் பொய்த்துப் போவதற்கான வாய்ப்புகளே மிகையாக உள்ளன.

திராவிடம், தேசியம், பொதுவுடைமை, ஜனநாயகம் என்று ஏதாவதொரு கொள்கை, தத்துவம், கோட்பாடு அடிப்படையில் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கிய பழைய தலைமுறை சுயநலம், பிழைப்புவாதம், இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பொறுக்கி அரசியல் என்று சீரழிந்த பண்புகளோடுதான் ஓய்வு பெறுகிறது. இவற்றுக்கு எதிரான போராட்டங்களினூடாக தலையெடுத்து வருவதல்ல தற்போதைய புதிய தலைமுறை அரசியல்வாதிகளின் கூட்டம். ஆனால், இவர்கள் எந்தவித சமூக விழுமியங்கள், மதிப்பீடுகள், ஒழுங்குமுறைகளையும் அடிப்படையாக வைத்து வளர்த்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல.

பிழைப்புவாதமே இலட்சியம், சந்தர்ப்பவாதமே அரசியல், கிரிமினல் வாதமே வழிமுறையாகக் கொண்டது தான் இப்போது ஆதிக்கத்துக்கு வரும் புதிய தலைமுறை அரசியல் தலைமை. நேரு பரம்பரையில் இந்திராகாந்திக்குப் பிறகு முதலில் அரசியல் வாரிசுரிமை பெற்ற சஞ்சய் காந்தி, பிறகு வந்த இராஜீவ் காந்தி ஆகியோரே, இந்தப்



படிப்பகம்

www.padippakam.com

புதிய தலைமுறை அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணமாக இருந்தனர்.

இராஜீவ் காந்தியும் இளையவர், புதியவர், பழைய கறைகள் இல்லாத திருவாளர் பரிசுத்தம் என்று பட்டமளித்து வரவேற்கப்பட்டார். அவர், தான் இடதுசாரியும் கிடையாது; வலது சாரியும் கிடையாது; சித்தாங்களினால் கட்டுப்படுத்தப்படுபவர் அல்ல; புதுமை, நவீனம், முன்னேற்றம், சாதனை இவைதான் எல்லா விஷயங்களிலும் பார்க்கப்படும்; ''பூனை கறுப்பா, வெளுப்பா என்பது முக்கியமில்லை; எலியைப் பிடித்தாலே போதும்'' என்கிற, சீனப் போலி கம்யூனிஸ்டு சித்தாந்தமே ராஜீவ் போன்றவர்களை வழிநடத்தியது.



இராமதாசின் வாரிசு அன்புமணி: பதவியைப் பிடிக்க ''பசுமைத் தாயகம்'' நாடகம்.

இறுதியில் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றங்களால் கறைபடிந்த திருவாளர் அசுத்தம் என்று அடையாளம் காணப்பட்டு அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியப்பட்டார்.

தற்போது தமிழக அரசியலில் ஆதிக்கத்துக்கு வரும் புதிய தலைமுறை அரசியல்வாதிகளுக்கும் கூட திராவிடம், தேசியம், காந்தியம், அம்பேத்கரியம், பெரியாரியம் என்று கொள்கை கோட்பாடு, சித்தாந்தங்களால் வழி நடத்தப்படுபவர்கள் அல்ல. திருமாவளவன், கிருஷ்ணசாமி நடத்தும் அரசியலை அவதானித்தாலே தெரியும், இவர்களுக்கு அம்பேத்கரியம் - பெரியாரியம் போன்றவை கூட பாசாங்கு செய்வதற்கான கருவிகள்தாம்.

ஓய்வு பெறும் பழைய தலைமுறை அரசியல் தலைவர்களிடம் இருந்து இவர்கள் கற்றுக் கொண்டுள்ள சித்தாந்தம், ''அரசியலில் நண்பர்களும் கிடையாது, பகைவர்களும் கிடையாது. அரசியலில் நிரந்தர எதிரியும் கிடையாது பகைவரும் கிடையாது; அரசியலில் கொள்கை, இலட்சியம் என்பதெல்லாம் வேறு, தேர்தல் கூட்டு என்பதெல்லாம் வேறு; அரசியலில் கட்சி மாறுவது, காலை வாறுவது, கவிழ்ப்பது, முதுகில் குத்துவது, மக்கள் நலன்களை அடகு வைத்து சொந்த ஆதாயம் அடைவது எல்லாம் சகஜம்; வெற்றிக் கூட்டணிதான் இலட்சியம்; இந்த அடிப்படையில் கட்சி நடத்துவதும், தேர்தலை எதிர்கொள்வதும் மட்டுமே சமூகப் பணி'' என்று கற்றுத் தேர்ந்துள்ளார்கள்.

இவர்களில் சிலர் கூட்டுப் பங்குத் தொழில் குழுமத்தின் தலைவர்களைப் போல, நவீனப் பரிவாரங்களைத் திரட்டி வைத்துக் கொண்டு சகல வசதிகளுடனும் அரசியல் நடத்துகிறவர்கள். மற்றவர்கள் நவீன நாட்டாண்மை பாணியில் கட்டைப் பஞ்சாயத்து ''தாதா'' அரசியல் நடத்துபவர்கள். இந்த இரண்டு பாணி அரசியலும் மக்களுக்குப் பொறுப்பாக இருந்து பதில் சொல்வதைத் துளியும் சகித்துக் கொள்ளாதவை. தலைமை மட்டுமல்லாது, எல்லா மட்டங்களிலும் இதே அடிப்படையைக் கொண்ட அணிகளையே தங்களுக்குக் கீழே வைத்திருக்கிறார்கள். ஓட்டுச் சீட்டு உரிமையைப் பயன்படுத்திப் பழைய தலைமுறை அரசியல்வாதிகளையே ஆட்டவோ, அசைக்கவோ முடியாத போது, இந்த அடாவடி புதிய தலைமுறை அரசியல்வாதிகளை என்ன செய்துவிட முடியும்!

● மாணிக்கவாசகம்

# ''குடிநீர் கொடுக்க வக்கில்லை; 'சுதந்திர'தினக் கொண்டாட்டம் ஒரு கேடா?'' – வி.வி.மு. ஆர்ப்பாட்டம்

உசிலை வட்டம், கருக்கட்டான்பட்டி. இப்பகுதி விவசாயிகள் உழவுக்கு மட்டுமல்ல, குடிக்கவும் நீரின்றி தவிக்கிறார்கள். பலமுறை, நகர்மன்ற அலுவலகத்திற்கு சென்று முறையிட்டும் மனு கொடுத்தும் சோர்ந்து போனார்கள்.

ஆகஸ்ட் 15, போலி சுதந்திர தினத்தன்று, ''குடிநீர் கொடுக்கவும் வக்கற்ற நகராட்சி நிர்வாகமே, சுதந்திர தினக் கொண்டாட்டம் ஒரு கேடா?'' என்று, விவசாயிகள் விடுதலை முன்னணி தலைமையில், 250-க்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சுதந்திரக் கொடி ஏற்ற வந்த நகர் மன்றத் தலைவர் மகேந்திரனை மறித்து கொடியேற்ற நிகழ்ச்சியை தடுத்தனர். போலீசுக்கு தகவல் பறந்தது. போலீசு முன் நடந்த பேச்சு வார்த்தையில், ''10 நாட்களுக்குள் நிரந்தரமாக குடிநீர் வழங்குவதாகவும், அதுவரையில் தினமும் 7 லாரி தண்ணீர் தருவதாகவும்'' நகர்மன்றத் தலைவர் உறுதியளித்தார்.

மறுநாள், 3 லாரி தண்ணீர் மட்டுமே வந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட பகுதி மக்களுக்கு தண்ணீர் தராமல் ஒதுக்கி வைத்தனர். இதனால் வி.வி.மு. தோழர்கள் தலைமையில் திரண்ட மக்கள் உள்ளூர் கவுன்சிலர் பழனிச்சாமியை முற்றுகையிட்டனர். இரு தரப்பினருக்குமிடையே பேச்சு வார்த்தை நாடகமாடிய போலீசு, அ.தி.மு.க. கவுன்சிலர் உள்பட 3 பேர் மீது பெயரளவிலான வழக்கும், வி.வி.மு. தோழர்கள் 6 பேர் மீது பிணையில் வரமுடியாத வழக்கும் பதிவு செய்து கைது செய்தது.

வி.வி.மு. தோழர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து 200-க்கும் மேற்பட்ட பெண்கள், போலீசு நிலையத்தில் குவிந்தனர். மக்களை ஒடுக்குவதற்கு, நகரமன்றமும் போலீசு கும்பலும் கைகோர்த்து நிற்பதை அனுபவபூர்வமாக உணர்ந்த மக்கள், குடிநீர் கிடைக்கும்வரை நாங்கள் ஓயமாட்டோம் என்று முழங்கினர். அடக்குமுறைக்கு அஞ்சாத மக்கள், வி.வி.மு. தலைமையில் அடுத்தக் கட்டப் போராட்டத்திற்கு தயாராகி வருகின்றனர்.

தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி, உசிலம்பட்டி.



படிப்பகம்

# கொங்கரார் ஸ்பின்னர்ஸ்

# தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்கும் கொள்ளைக் கூட்டம்

**கொ**ங்கரார் ஸ்பின்னர்ஸ் - புகழ் பெற்ற கோல்ட்ஸ் நூல் மற்றும் ஆயத்த உள்ளாடைகள் தயாரிக்கும் நிறுவனம். கோவை மாவட்டம், உடுமலை வட்டம், பெதப்பம்பட்டியில் 1971-ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இந்நூற்பாலையில் 1000-க்கும் மேற்பட்ட நிரந்தர தொழிலாளர்கள் முன்பு பணிபுரிந்தனர். தற்போது 425 நிரந்தர தொழிலாளர்கள் மட்டுமே இங்கு பணிபுரிகின்றனர். இத்தொழிலாளர்களுக்கும் நிர்வாகம் முறையாக சம்பளம் வழங்கவில்லை. முகமூடிக் கொள்ளையர்களுக்கு இணையாக, இந்நூற்பாலை தொழிலாளர்களிடம் தனது கைவரிசையைக் காட்டிவருகிறது நிர்வாகம்.

''விருப்ப ஓய்வு'' என்ற பெயரில் 1997-ஆம் ஆண்டு 240 தொழிலாளர்களை ஆலையிலிருந்து வெளியேற்றியது நிர்வாகம். அவர்களுக்குச் சேர வேண்டிய ''விருப்ப ஓய்வு'' தொகையை இதுநாள் வரையில் தராமல் ''வைப்பு நிதி'' என்ற பெயரில் தொழிலாளர்களுக்கு வெறும் போலி ''பாண்டு''களை மட்டும் கொடுத்து விட்டு, ரூபாய் 3 கோடியை சுருட்டிக் கொண்டது.

வைப்பு நிதியை ஓராண்டுக்கு பெற்று விட்டு, 6 ஆண்டுகளுக்குப் பிறகும் அப்பணத்தைத் தராமல் ஏமாற்றுகிறது நிர்வாகம். போராடும் தொழிலாளர்களைப் பிளவுபடுத்திச் சாகடிக்கிறது. வெளியேற்றப்பட்ட நிரந்தரத் தொழிலாளர்கள் சிலரை அதே ஆலையில் தினக்கூலிகளாக அமர்த்தியுள்ளது. அவர்களுடைய வைப்பு நிதிக்கு மட்டும் அதிக வட்டி தருவதாக வெற்று வாக்குறுதிகளை வீசியிருக்கிறது.

''விருப்ப ஓய்வு'' திட்டத்தில் வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களின் பெயரில் போலி கடன் விண்ணப்பங்களைத் தயாரித்து, தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி - திருப்பூர் கிளையிடமிருந்து தொழிலாளர்கள் பெற்றதாக பல கோடி ரூபாய் வங்கி நிதியை சுருட்டியிருக்கிறது. தற்போது வேலையிழந்து பட்டினியில் வாடும் தொழிலாளர்கள், வாங்காத கடனுக்கு வங்கியிலிருந்து வந்திருக்கும் ''கடன் நடவடிக்கை நோட்டீஸ்'' கண்டு பீதியில் உறைந்துள்ளனர்.

பணிபுரிந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்குத் தொலைக்காட்சி பெட்டியைத் தவணைமுறையில் வாங்கிக் கொடுத்தது நிர்வாகம். அதற்காக, தொழிலாளர்களின் சம்பளத்தில் மாதம் ரூபாய் 750 வீதம் மொத்த பணத்தையும் வசூலித்தது. வேலையிழந்த அந்தத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு இப்போது உடுமலைப்பேட்டை முனிசிபல் கோர்ட்டு அமீனா மூலம் நோட்டீஸ் வந்துள்ளது. தொலைக்காட்சி பெட்டி கடனை உடனடியாக செலுத்த வேண்டும் என்று கடன் கொடுத்த நிறுவனம் எச்சரித்துள்ளது. வசூலித்த பணத்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குச் செலுத்தாமல் நிர்வாகம் ஏமாற்றியிருப்பதும் இப்போது அம்பலமாகியுள்ளது. தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்த காப்பீடு பணத்தையும் இவ்வாறு ஏப்பம் விட்டுவிட்டது, நிர்வாகம்.

தங்கள் வேலையையும் இழந்து பணத்தையும் இழந்து தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல், கடந்த 6 ஆண்டுகளில் 21 தொழிலாளர்கள் மனமுடைந்து இறந்து போய்விட்டனர்.

நிர்வாகத்தின் பகற்கொள்ளையையும், தொழிலாளர் விரோதப் போக்கையும் எதிர்க்கத் திராணியற்ற, சமரச, பிழைப்புவாத தொழிற்சங்களான ஐ.என்.டி.யு.சி., என்.எல்.ஓ., எம்.எல்.எப்., எல்.பி.எப்., போன்ற தொழிற்சங்கங்களிடமிருந்து விலகி, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், ''பாதிக்கப்பட்டோர் தொழிலாளர் நல அமைப்பு'' என்ற பெயரில் திரண்டனர்.

கோரிக்கை மனுக்கள், கோரிக்கை விளக்கக் கூட்டங்கள், தொடர் உண்ணாவிரதப் போராட்டங்கள், தொடர் துண்டு பிரசுரங்கள், முதலாளி வீடு முன் அமைதிவழி மறியல், தீக்குளிப்பு போராட்ட எச்சரிக்கைகள் என்று ஏராளமான போராட்டங்களைத் தொழிலாளர்கள் அடுத்தடுத்து நடத்தினர்கள். இதனால் கருங்காலி மற்றும் போலீசு கும்பல்களால் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக மிரட்டப்பட்டனர்.

போலீசு உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், சார் ஆட்சியர், பொருளாதார குற்றப்பிரிவு - கோவை - தொழிலாளர் நலத்துறை, மாநில மனித உரிமைகள் ஆணையம், நுகர்வோர் நீதிமன்றம், நாடாளுமன்றத் தலைவர் மற்றும் முதல்வர் என்று அனைத்து அதிகார மட்டங்களுக்கும் மனுக்களை அனுப்பி நீதி கேட்டு மன்றாடினார்கள் தொழிலாளர்கள். ஆனால், அதிகார மட்டத்தில் கனது டைப்பு நடவடிக்கைகள் மட்டுமே மிஞ்சியது.

முகமூடி போடாமலேயே தொழிலாளர்களிடம் கொள்ளையடித்த ஆலை முதலாளி பாலசுப்பிரமணியம், இதேபோல் அரசு மற்றும் வங்கிக் கடனுக்கும் பட்டை நாமம் சாத்தியுள்ளார். 'கொங்கரார் இன்டகிரேடட் வைபர்ஸ் லிமிடெட்' - கெடிமேடு, என்ற நிறுவனத்தின் பெயரில் வங்கியில் 126.59 கோடி ரூபாய் கடன் பெற்று, திருப்பிச் செலுத்தாதோர் பட்டியலில், இந்திய அளவில் 71-ஆவது நபராக வலம் வருகிறார். ஆனால், அவரு

தொடர்ச்சி
26-ஆம் பக்கம்

**கொங்கரார் ஸ்பின்னர்ஸ் முதலாளி பாலசுப்பிரமணியத்தின் பகற்கொள்ளையை அம்பலப்படுத்தி பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நடத்திய உண்ணாவிரதம்.**



www.padippakam.com



# தினவெடுத்துத் திரியும் தமிழக போலீசு

**சென்னை நகரில் கடந்த 10 ஆண்டுகளில் எந்தத் தவறும் செய்யாமல் பணிபுரிந்த 188 போலீசாருக்கு முதல்வரின் காவல் பதக்கங்களை அணிவித்தார், போலீசு கமிசனர் நடராஜன்.** *(தினமணி, ஜூலை 17)*

**''வேலியே பயிரை மேய்ந்தது. மெரீனா கடற்கரையில் தம்பதியை மிரட்டி வழிப்பறி: எஸ்.ஐ. உள்பட 3 பேர் கைது.''** *(தினமணி, ஜூலை 16)*

— இந்த இரண்டு செய்திகளுக்கும் இடைவெளி 24 மணி நேரம் கூட இல்லை! இதுதான் போலீசின் சிறப்பு! போலீசின் பாணியில் சொன்னால் ''இதுதாண்டா போலீசு!''

●●●

**செ**ன்னை புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் ரபி-தில்சாத்; புது மணத் தம்பதிகள். கடந்த ஜூலை 15-ந் தேதி மாலை கடற்கரைக்கு வந்தனர். சிறுநீர் கழிப்பதற்காக இருட்டில் தனியாக ஒதுங்கிய தில்சாத்தை 3 போலீசுக்காரர்கள் சூழ்ந்துக் கொண்டனர். ''விபச்சாரி என்று உன்னைக் கைது செய்து விடுவோம். எங்களிடம் ரூபாய் 1500 கொடுத்தால் விட்டு விடுவோம்'' என்று மிரட்டினர். தில்சாத் பீதியில் கூச்சலிட, தூரத்தில் இருந்த கணவர் ஓடிவர, ''நீ யார்?'' என்று அவரையும் மிரட்டியது போலீசு. திடீரென தில்சாத்தின் கையிலிருந்த பையை பிடுங்கிக் கொண்டு ஓட பொதுமக்கள் பிடித்து விசாரிக்க உண்மை அம்பலமானது! அண்ணா சதுக்கம் போலீசு நிலைய சப்-இன்ஸ்பெக்டர் முருகன் (54), சென்னை - கோயம்பேடு போலீசு நிலைய முன்னாள் போலீசு சிங்கராஜ் (49) மற்றும் போலீசு உளவாளி திருவாசகம் (49) ஆகிய மூவரும் திருடர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர்.

●●●

**கோ**வை, வைசியாள் வீதியைச் சேர்ந்தவர் தங்கப்பட்டறை அதிபர் கிருஷ்ணன். கடந்த மே மாதம் 29-ஆம் தேதி ஒரு மர்மக் கும்பல் இவரைச் சந்தித்தது. குறைந்த விலைக்கு தங்க பிஸ்கெட்டுகள் தருவதாகக் கூறியது. பிறகு, கோவை-பந்தயச்சாலை பகுதியிலுள்ள சாரதாம்பாள் கோயிலுக்குள் வைத்து, கிருஷ்ணனிடமிருந்து ரூபாய் 5.5 லட்சங்களை மர்மக் கும்பல் பெற்றபோது திடீரென போலீசு ஜீப் அங்கு வந்தது. அதிலிருந்த 2 போலீசுக்காரர்கள், ''தங்க பிஸ்கெட்டா கடத்துகிறீர்கள்?'' என்று மிரட்டி 5.5 லட்சம் பணத்துடன் மர்மக் கும்பலை கடத்திச் சென்றனர். பணத்தை இழந்து நின்ற கிருஷ்ணன் செய்வதறியாது பந்தயச்சாலை போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தார். விசாரணையில் உள்ளூர் போலீசே, ரௌடிகளுடன் கூட்டுச் சேர்த்து கொண்டு தங்க பிஸ்கெட் நாடகமாடியது தெரியவந்தது. கோவை புறநகர் ஆயுதப் படைப் பிரிவைச் சேர்ந்த நித்யானந்தன் என்ற போலீசு, போலீசு ஜீப்பிலேயே வந்து பணத்தைக் கொள்ளையடித்தது நிரூபிக்கப்பட்டது.

●●●

**ம**துரை எழுத்தாணிக்காரத் தெருவில், கடந்த ஜூன் மாதம் 18-ஆம் தேதி மர்மக் கும்பல் ஒன்று சுருளி மற்றும் நீலகண்டன் என்ற இரு ரௌடிகளைப் பட்டப்பகலில் வெட்டிக் கொன்றது. இதை இரு ரௌடிக் கும்பலுக்குள் நடந்த பழி வாங்கும் படலம் என்று வழக்கை முடித்தது, போலீசு. ஆனால், உண்மையில் இக்கொலையைச் செய்தது, மதுரை போலீசு இன்ஸ்பெக்டர் சுரேஷ்பாபு என்பது பின்னர் அம்பலமானது. காரணம், இன்ஸ்பெக்டர் சுரேஷ்பாபுவின் அண்ணன் புஷ்பராஜ் என்பவன் முன்னாள் ரௌடி. இவனைக் கொன்றது சுருளி என்பதால், சுருளியை அதே வழியில் தீர்த்துக் கட்டியது சுரேஷ்பாபுதான் என்பது நிரூபணமானது.

●●●

**க**ற்பழிப்பு, விபச்சாரம், ஆள்கடத்தல், கொலை, கொள்ளை, ரௌடித்தனம், வழிப்பறி, திருட்டு மற்றும் மோசடி - இவற்றின் மொத்த உருவமான பத்துதலை மிருகம்தான் போலீசு. தினமும் பத்திரிக்கைகளைப் புரட்டினால், அடுத்தவன் மனைவியைக் கெடுத்த போலீசு, சொந்த மனைவியைக் கொளுத்திய போலீசு என்று மனித நாகரிகத்துக்கே அப்பாற்பட்ட போலீசு மிருகங்களைக் காணமுடியும்.

தற்போது, சந்தைப் பத்திரிகைகளில் 'அரங்கு நிறைந்த காட்சிகளாக' ஓடிக் கொண்டிருக்கும் 'ஜெகஜ்ஜால ஜெயா' ஆபாச கதைகள், காமசூத்திரத்தின் விளக்கவுரையையும் விஞ்சுகின்றன. இந்த ஆபாசக் கதையில் போலீசு ஓநாய்களே கதாநாயகன்களாகவும்

**சென்னை மெரீனா கடற்கரையில் ஒரு புதுமணத் தம்பதியினரை மிரட்டி, அவர்களிடமிருந்த பணத்தை வழிப்பறி செய்துவிட்டு ஓடிய பொழுது, பொது மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்ட காக்கி சட்டை கிரிமினல்கள். தனது சகபாடிகளின் முகவிலாசம் வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, குற்றவாளிகளின் முகத்தை மூடி, நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தது சென்னை போலீசு.**





படிப்பகம்



வில்லன்களாகவும் மற்றும் நீதிமான்களாகவும் பல வேடங்களில் திரிகின்றனர்.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஜெயா என்ற ஜெயலட்சுமியை முப்பதுக்கும் மேற்பட்ட போலீசு அதிகாரிகள் தனித்தனியாகக் கற்பழித்துள்ளனர். இதில் அரைடஜனுக்கும் மேற்பட்ட போலீசு அதிகாரிகள் ஜெயலட்சுமியை இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டு பல பேருடன் படுக்க வைத்து பணமும் பதவியும் பெற்றுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்ட போலீசு துணைக் கண்காணிப்பாளர் ராஜசேகர், உடுமலைபேட்டை போலீசு சார்பு ஆய்வாளர் பெரியசாமி, கோவை ஊரக மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் சொக்கலிங்கம், சமயநல்லூர் போலீசு துணைக் கண்காணிப்பாளர் கனகராஜ் மற்றும் ஆய்வாளர்கள் பொள்ளாச்சி மோகன்ராஜ், திருமங்கலம் ரவிச்சந்திரன், திடீர் நகர் இளங்கோவன், அரவக்குறிச்சி சுந்தரவடிவேல், கரூர் விஸ்வநாதன் மற்றும் மலைச்சாமி, சுப்புராம், காசிராஜன், ஷாஜஹான், ஜான்பாய், கண்ணன் என்று பட்டியல் நீளுகிறது.

இந்தக் காமலீலை தெற்கே திருநெல்வேலியில் ஆரம்பித்து உடுமலை, திண்டுக்கல், கோவை, மதுரை, திருச்சி என்று வளர்ந்து சென்னை கோட்டையிலும் பரவியிருக்கிறது. அமைச்சர் தளவாய் சுந்தரத்தின் உதவியாளர் காஜா நிஜாமுதீன், அமைச்சர் விசுவநாதனின் உதவியாளர் முத்து மாணிக்கம், அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் உதவியாளர் ராமச்சந்திரன் ஆகியோரை அவசரமாகப் பணி நீக்கம் செய்துள்ளது அரசு. இதில் ஆய்வாளர் மலைச்சாமி, ஜெயலட்சுமியுடன் சென்னை சென்று முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் சிறந்த போலீசுக்கான பட்டம் வாங்கியவர்.

**ஜெயலட்சுமி விவகாரத்தில் போலீசு கும்பல் கையும் களவுமாகப் பிடிபட்ட பிறகு, தங்களை 'ஏமாந்த போலீசு' என்று அனுதாப அலையை பத்திரிக்கைகள் மூலம் உருவாக்குகிறது.**

சென்ற இடமெல்லாம் ஜெயலட்சுமி தங்குவதற்கு ஆடம்பர மாளிகை, பறப்பதற்கு சொகுசு கார், பாதுகாப்பு எடுபிடி வேலைக்கு போலீசு, திடீர் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வக்கீல்கள் என்று ஜெயலட்சுமியை தங்களுடைய 'உயிர் தோழி'யாக அடைகாத்துள்ளனர், உயர் போலீசு அதிகாரிகள். அதன்மூலம் பணம், பதவிகளைப் பெற்று தரும் நிழல் உலக ராணியாக்கியுள்ளனர்.

போலீசு கும்பல் இப்போது கையும் களவுமாகப் பிடிபட்ட பிறகு தங்களை 'ஏமாந்த போலீசு' என்று அனுதாப அலையை பத்திரிக்கைகளில் உருவாக்குகிறது. மரவுரிதரித்து முனிவர்கள் போலிருந்த போலீசின் தவத்தை கெடுத்த காமப் பிசாசாக ஜெயலட்சுமியைச் சித்தரிக்கின்றன, 'புலனாய்வு' பத்திரிக்கைகள்!

கொலை, கொள்ளை, கிரிமினல் குற்றவாளிகள் என்றால், ஏதோ முகமூடி மாட்டிக் கொண்டு, கத்தி, நாட்டுத் துப்பாக்கி தூக்கிக் கொண்டு இரவில் மட்டுமே நடமாடும் ரகசிய பேர்வழிகள் என்பதாக 'பிலிம்' காட்டுகிறது போலீசு!

''குற்றவாளிகளை பிடிக்க போலீசு படை விரைந்தது!'' ''குற்றவாளிகளைத் தேடி போலீசு வலைவீச்சு!'' ''உயிரை பணயம் வைத்து குற்றவாளிகளைத் துரத்திச் சென்ற போலீசு!'' என்று சாகசக் கதைகளை சந்தைப் பத்திரிகைகளில் பரப்புகிறது போலீசு. இதற்கு சாட்சியாக, சாலையோரத்தில் விபச்சாரத்திற்கு அழைத்ததாக, ''அழகி''களையும், புடவை மறைப்பில் சாராயப் 'பாக்கெட்'டுகள் கடத்தியதாகப் பெண்களையும் புகைப்படம் எடுத்து 'ஸ்காட்லாந்து' போலீசு என்று தங்களுக்கு பட்டம் சூட்டிக் கொள்கிறது போலீசு.

ஆனால், சட்டவிரோத, சமூக விரோத, தேச விரோத செயல்களுக்கு எல்லாம் காரணம் காக்கிச் சட்டை கிரிமினல்கள்தான் என்பது சமூகத்தின் எல்லா அரங்குகளிலும் நிரூபிக்கப்படுகிறது.

முப்பதாயிரம் கோடி போலி முத்திரைத்தாள் ஊழலில் தமிழகத்தின் உளவு துறை தலைமை போலீசு அதிகாரி முகமது அலி, மத்திய உளவு துறை போலீசால் கைது செய்யப்பட்டார். தற்போது, சென்னை மத்திய சிறையில் 'ஏ' பிரிவில் உபசரிக்கப்படுகிறார்.

இந்தியா முழுக்க 18 மாநிலங்களில் 78 நகரங்களில் கொடி கட்டிப் பறந்த போலி முத்திரைத்தாள் ஊழலில் ஏற்கெனவே, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திர போலீசு உயரதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக, தமிழகத்தின் முன்னாள் உள்துறை செயலர் சையத் முனிர் கோடா மற்றும் துணை செயலர் கிருஷ்ணன் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போலி முத்திரைத்தாள்கள் என்று தெரிந்தே, பல நூறு கோடி ரூபாய்க்கு வாங்கி பயன்படுத்திய அரசு ஆயுள் காப்பீட்டு கழகத்தின் அதிகாரியும் கைதாகியுள்ளார்.

● 300 கோடி ரூபாய்க்கும் அதிகமான போலி முத்திரைத்தாள்களை பறிமுதல் செய்யாமல் குற்றவாளிகளிடமே ஒப்படைத்தது.

● குற்றவாளிகள் மீது கண்துடைப்புக்காக ஒரு சிறு வழக்கு பதிவு செய்து அதைக் கிடப்பில் போட்டது. அவ்வழக்கைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி குற்றவாளிகளிடம் பேரம் நடத்தியது.

**தன்னைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாகவும், தன்னை வைத்து விபச்சாரம் செய்ததாகவும் ஜெயலட்சுமியால் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள (இடமிருந்து) போலீசு கண்காணிப்பாளர் சொக்கலிங்கம்; துணைக் கண்காணிப்பாளர் ராஜசேகர்; ஆய்வாளர்கள் இளங்கோவன், சுப்புராம், மலைச்சாமி; உதவி ஆய்வாளர் ஷாஜகான்; தலைமை காவலர் கண்ணன்.**



www.padippakam.com



● வழக்கு பதிவு செய்து ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகும் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் காலம் தாழ்த்தியது.

● முகமது அலியின் அலுவலகத்துக்கு குற்றவாளிகள் வந்ததற்கு சாட்சியாயிருந்த வருகைப் பதிவேடு தாள்களைக் கிழித்திருப்பது.

● நீதிமன்றத்தில் குற்றவாளிகள் பிணையில் தப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தது.

● போலி முத்திரைத்தாள்களை தயாரித்த அப்துல் கரீம் தெல்கியை, முகமது அலி கர்நாடகத்தில் இரகசியமாகச் சந்தித்தது.

● தெல்கியின் தமிழ்நாட்டு ஏஜெண்ட் நிஜாமுதீனிடம் பல கோடி ரூபாய்கள் இலஞ்சமாகப் பெற்றது.



கோவையில் தங்கப்பட்டறை அதிபரிடம் ரூ. 5.50 லட்சத்தைப் பறித்த மோசடிக் கும்பலின் கூட்டாளி ஆயுதப் படைப் பிரிவைச் சேர்ந்த நித்தியானந்தன் (முகத்தை மூடி இருப்பவர்). கொள்ளையடிக்கும் பொழுது வராத வெட்கம், நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படும் பொழுது வருகிறது.

இவ்வாறு, 2002-2003 வரை ஒரே ஆண்டில் தமிழகத்தில் டி.ஐ.ஜி. முகமது அலி தலைமையில் ரூபாய் 300 கோடிக்கு போலி முத்திரைத்தாள் விற்கப்பட்டது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. 'முசுலீம் தீவிரவாதிகள் மூலம் நாட்டைச் சீர்குலைக்க, பாகிஸ்தான் உளவு நிறுவனம் செய்த சதி இது'

# கோவை போலீசின் லீலைகள்

ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதி, சென்னை செயலகத்தில் நடந்த மாவட்ட அதிகாரிகள் மாநாட்டில் பேசிய ஜெயலலிதா, "சட்டம் - ஒழுங்கு மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது. இந்த முயற்சியில் ஈடுபட்ட அனைத்து போலீசு அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன்" என்றார். ஆனால், போலீசு சட்டம் - ஒழுங்கை எப்படி பராமரிக்கிறது என்பதற்கு சாட்சி இதோ! கோவை மாநகரில் மட்டும் கடந்த சில மாதங்களில் நடந்த நிகழ்ச்சிகள் இவை!

● கோவை மாநகர காவல் துறை ஆயுதப் படை பிரிவின் போலீசான சுரேஷ், காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக நின்றிருந்த சுஜாதா என்ற பெண்ணிடம் வம்பு செய்தபோது, பொதுமக்கள் தர்மஅடி கொடுத்து போலீசு சுரேஷை காந்திபுரம் போலீசு நிலையத்தில் ஒப்படைத்தனர்.

● காந்திபுரம் மையப் பேருந்து நிலையத்தில் நின்றிருந்த, கோபி பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரை மிரட்டி, ரூபாய் 700-ஐ அவருடைய சட்டைப் பையிலிருந்து பறித்த பூமிநாதன் என்ற போலீசு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

● போலீசு நிலையத்தில் புகாரைப் பதிவு செய்ய (எப்.ஐ.ஆர்.) லஞ்சம் பெற்ற சிங்காநல்லூர் பி-5 போலீசு நிலைய குற்றப்பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் ராஜமாணிக்கம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

● கோவை காட்டூர் பி-3 போலீசு நிலையத்தின் தலைமை போலீசுக்காரரான பால கிருஷ்ணன், காந்திபுரம் பேருந்து நிலையத்தில் நின்றிருந்த 2 இளம் பெண்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதாகக் கூறி, தனது இரண்டு சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றார். வழியில் ஒரு பெண் மிரண்டு ஓட, இன்னொரு பெண்ணை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, இரவு முழுக்க லாட்ஜில் வைத்து வன்புணர்ச்சியில் ஈடுபட்டார். உண்மை அம்பலமாகி பாலகிருஷ்ணன் கைது செய்யப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டார். விசாரணையில் அந்த இரு பெண்களும் மதுரையிலிருந்து கோவை பஞ்சாலையில் வேலைக்கு சேர உறவினர்கள் வீட்டிற்கு வந்தவர்கள் என்று தெரியவந்தது.

● கோவை மாநகரில் மட்டும், ரோந்து சுற்றும் போலீசு ஜீப்புகள் 50-க்கும் மேலாக இயங்குகின்றன. போலீசு கும்பல் சந்து பொந்துகளில் எல்லாம் சென்று மாமூல் வாங்குவதற்காகதான் அதைப் பயன்படுத்துகின்றன. மற்றபடி கொலை, கொள்ளை, திருட்டு, செயின் பறிப்பு குற்றங்கள் கோவை நகரில் குறையவே இல்லை. இதை போலீசு கும்பலே ஒப்பு கொள்கிறது. குற்றங்கள் குறைவதற்காக கோவை மாவட்டம், பொள்ளாச்சி கிழக்கு போலீசு நிலையத்தில் 'கறுப்பு கோழி அறுப்பு' பூஜை நடத்தியது போலீசு!



படிப்பகம்



என்று புரளி கிளப்புகிறது, அதிகார கும்பல்.

மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் பிரம்மாண்டமான போலீசு இயந்திரத்தைக் கொஞ்சமும் கூச்சமில்லாமல் தங்களுடைய இருட்டறை லீலைகளுக்குப் பயன்படும் பாதுகாப்பு சாதனமாக்கிக் கொள்கின்றனர் உயர் போலீசு அதிகாரிகள். மறுபுறம், இதே போலீசு மிருகங்கள் போராடும் மக்களைத் தொச்சைப்படுத்தி சட்டம் - ஒழுங்கை மீறியதாக கடித்துக் குதறுகின்றன.

தற்போது தமிழகம் முழுவதும் நடக்கும் கொலை, கொள்ளை, திருட்டுக்கான காரணங்கள் முழுக்கவும் போலீசு - திருடன் விளையாட்டுத்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்!

திருட்டுக் கும்பல், திருட்டு பொருளை வாங்கிய கும்பல் மற்றும் பொருளை பறிகொடுத்த கூட்டம் என்ற வட்டத்தில் போலீசு கும்பல் கண்ணாமூச்சி ஆடுகிறது. ஆட்டத்தில் போலீசு கும்பலுக்குப் பேரம் படிந்தால் திருட்டு பொருள்கள் வெளியில் வரும். இல்லையானால் நிரந்தரமாக காணாமல் போகும் என்பது ஊரறிந்த உண்மை.

கொலை, கொள்ளை, திருட்டை கண்டுபிடிக்க ஓடும் போலீசு மோப்ப நாய்கள், இடது பக்கம் ஓடுவதும், வலது பக்கம் ஓடுவதும் கிளம்பிய இடத்திலேயே படுத்துக் கொள்வதும் கூட இந்த அடிப்படையில்தான்!

திருட்டுப் போன நகைகள் புது 'டிசைனாக' மாறி போலீசின் கழுத்தில் தொங்குவதும் கொள்ளை போன பணம் போலீசின் 'சின்ன' வீட்டில் சொகுசு காராக ஓடுவதும் தற்போது 'ஜெயா'வின் வாக்குமூலங்களாக வெளியில் வருகின்றன.

கடந்த ஜனவரி மாதம் திருவண்ணாமலையில் வி.பி.சி. ஜூவெல்லரி என்ற நகைக்கடையில நாலரை கிலோ தங்கமும் மூன்று லட்சம் ரூபாய் ரொக்கமும் திருடு போயின. அப்போது, இது, 'கடை உரிமையாளர் போட்ட நாடகம்' என்று போலீசு வழக்கை முடித்தது. போலிசை ஏமாற்றியதாக, கடைகாரரை மிரட்டி, ரூபாய் பத்து லட்சம் லஞ்சம் வேறு வாங்கியது போலீசு! இப்போது, போலீசு காவலில் இருந்த இருவர், 'நகைக் கடையில் திருடியது நாங்கள்தான்' என்று வாக்குமூலம் அளித்துள்ளனர். போலீசு கும்பலின் இந்த திருட்டை அம்பலப்படுத்தி வியாபாரிகள் போராட்டம் நடத்தியவுடன் ரமேஷ், துரைசாமி என்ற இரு போலீசு அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.





**திருவண்ணாமலையில் உள்ள வி.பி.சி. ஜுவல்லரி என்ற நகைக் கடையின் அதிபரை மிரட்டி இலட்சக்கணக்கில் பணம் பறித்த கிரிமினல் குற்றத்திற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஆய்வாளர் துரைசாமி (மேலே) மற்றும் துணை ஆய்வாளர் ரமேஷ்.**

●●●

திருட்டு போலீசு, விபச்சார போலீசு, வழிப்பறி போலீசு என்பதெல்லாம் போலீசு துறையில் இருக்கும் கையளவான ''கறுப்பு ஆடு''களின் தறிகெட்ட செயல் என்று ஆளும் கும்பல்கள் திரும்பத் திரும்ப புளுகுகின்றன. ஆனால், போலீசு துறை என்பதே, கிரிமினல்களை முடிவேயில்லாமல் உற்பத்திச் செய்யும் ஆளும் வர்க்கங்களின் அட்சயப் பாத்திரம்தான் என்பது தினமும் நிரூபிக்கப்படுகிறது!

கிரிமினல் குற்றங்களின் கீழ் போலீசு கும்பல் பிடிபடும்போது சந்தைப் பத்திரிக்கைகள் ஒவ்வொரு முறையும் கூட்டாக ஒப்பாரி வைத்துவிட்டு ஓய்ந்து விடுகின்றன. அதற்கு ஈடாக போலீசின் வீரசாகச கதைகளை பெரிதாக எழுதி, கணக்கை நேர் செய்கின்றன.

பார்ப்பன பாசிச ஜெயலலிதா ஒரு படி மேலே சென்று தன் அதிகார பல்லக்கிலேயே போலீசை ஏற்றித் திரிகிறார். அரசு விழாக்கள், அதிகார வர்க்கக் கூட்டங்களில் போலீசை தலையில் வைத்து பாராட்டுவது, பட்டம், பதவிகள் சூட்டி போலீசை அலங்கரித்து அழகு பார்ப்பது, ஆலோசனைக் கூட்டங்கள் என்ற பெயரில் போலீசுடன் குலாவுவது, திடீர் விருந்தளித்து ஆச்சரியப்படுத்துவது என்று போலீசு கும்பலைத் திணறடிக்கிறார்.

பரந்துபட்ட மக்கள், குடிநீருக்காக நாடோடிகளாய் தமிழகம் முழுக்க அலையும்போது, காவிரி படுகை விவசாயிகள் தற்கொலையில் சாகும்போது, பாசிச ஜெயாவோ தன்னுடைய வளர்ப்பு பிராணிகளான போலீசு கும்பலை ஊட்டி வளர்க்கிறார்.

போலீசு உயரதிகாரிகளுக்கு அதிநவீன அலுவலகங்கள், ஓய்வு இல்லங்கள், மாலை நேரத்திற்கான புத்துணர்ச்சி கிளப்புகள், குளுகுளு அரங்குகள், குடியிருப்புகள் மற்றும் நவீன வாகனங்கள், கை தொலைபேசி கருவிகள் என்று குளிப்பாட்டுகிறார். அம்பலப்பட்டு போன கிரிமினல் போலீசுக்குக்கூட வாஞ்சையோடு வக்காலத்து வாங்குகிறார். மறுபுறம், எதிர்க்கட்சியாக வீற்றிருக்கும் போது மட்டுமே போலீசு அக்கிரமங்களை பட்டியலிடும் கபடவேடதாரி கருணாநிதி, போலீசு துறையின் ''நுரையீரல் கெட்டு விட்டது'', ''ரத்தக் குழாய் தடித்து விட்டது'' என்பது மாதிரியான மொட்டையான வார்த்தைகளுக்கு மெட்டுகள் போட்டு 'போலீசு எதிர்ப்பு' லாவணி நடத்துகிறார்.

உண்மையில், அடி முதல் நுனி வரை அழுகி நாறும் சமூகத்தின் வேண்டாத சதை பிண்டம்தான் போலீசு. இதை, மொத்தமாக அறுத்தெறியாமல் மக்களுக்கு விடிவு இல்லை. தினமும் அரங்கேறும் போலீசு அக்கிரமங்களில் மிதிபடும் மக்களே இதற்கு சாட்சி! சமூக விரோத கிரிமினல் கும்பலாகச் சீரழிந்துவிட்ட போலீசு அமைப்பையே கலைத்துவிட்டு, அனைத்து மக்களும் ஆயுதம் ஏந்தும் உரிமைக்காகப் போராடுவதும், குற்றவாளிகளைத் தண்டிக்கும் உரிமையை மக்கள் கமிட்டிகளே கையில் எடுத்துக் கொள்வதும்தான் போலீசு கும்பலை முடமாக்கும்.

**● பச்சையப்பன்**

# பிழைப்புவாதமே தலித்தியமாக... ஓட்டுண்ணிகளே தலைவர்களாக...

"சேரிக்கு' இழிவைத் தேடித் தரும் 'தலித்' தலைவர்கள்'' என்ற அட்டைப்படச் சிறப்புக் கட்டுரை 2004 மார்ச் புதிய ஜனநாயகம் இதழில் வெளிவந்தவுடன் வெகுண்டெழுந்து முதல் எதிர்வினையாற்றியது ''தலித் முரசு'' என்ற ''சமூக நீதி''த் திங்களிதழ்.

''பு.ஜ.''விற்கு எதிராக முட்டாள்தனமான பல கேள்விகளையும் அவதூறுகளையும் கொண்ட ''தலித்துகள் x ம.க.இ.க.'' என்ற கட்டுரையை சமரன் என்பவர் பெயர் தாங்கி, 2004 ஏப்ரலில் ''தலித் முரசு'' பிரசுரித்தது.

திரு. புனித பாண்டியன் ஆசிரியராக உள்ள ''தலித் முரசு'' இதழில், ''தலித்தியம்'' தொடர்பாக ஏற்கெனவே வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்துப் பார்த்தாலே தெரியும்; இந்த ''தலித்துகள் x ம.க.இ.க.'' என்ற கட்டுரையை பிரசுரிக்கவும் தகுதியானதுதானா, தாம் உண்ணும் உப்புக்கு விசுவாசமாகத்தான் எழுதப்பட்டதா என்பதை அவர் புரிந்து கொண்டிருப்பார்.

''தலித் மக்கள் ஆட்சி அதிகாரத்தை நோக்கி அடியெடுத்து வைத்தாலே - அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர்.'' ''அரசியல் அரங்கில் தலித் அடையாளத்துடன் நிற்க முனையும் எவரையும் இவர்கள் ஆதரிக்க மறுப்பது பட்டவர்த்தனமாகியுள்ளது.''

''சாதிக்கு எதிராக, சமத்துவ சிந்தனையுடன், சமூக நீதியை நிலைநாட்ட - தலித் தலைவர்களும் இயக்கங்களும் தீவிரமாக முனைகின்ற போதெல்லாம் அவர்களின் எழுச்சியை, அத்துமீறலை கொச்சைப் படுத்துவது - சாதி இந்துக்களின் மனோநிலை. பு.ஜ. கட்டுரையும் அதன் அடியொற்றி, குறைந்தபட்ச அறிவு நாணயமும், நேர்மையுமின்றி ஆத்திரத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. வானத்துக்குக் கீழே நடைபெறும் எல்லா சமூக அநீதிகளுக்கும் - தாங்கள் மட்டுமே தீர்வு சொல்லுகின்ற வல்லாண்மை படைத்தவர்கள் என்ற தன்னகங்காரத் தொனியுடனேயே அது அமைந்திருக்கிறது'' என்ற அறிமுக அவதூறுடன் ''தலித் முரசு'' கட்டுரை தொடங்குகிறது. ஆனால் இந்த அவதூறுகளுக்குச் சான்றுகள் எழுதவேண்டும் என்று எள்ளளவும் முயற்சிக்கவே இல்லை.

கிருஷ்ணசாமியும், திருமாவளவனும் எம்.எல்.ஏ., எம்.பி. பதவியைப் பிடிப்பதற்கு எத்தணிப்பது எல்லாம் தலித் மக்கள் ஆட்சி அதிகாரத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதாகுமா? நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியல் அரங்கத்தில் எந்த அடையாளத்துடன், யார் நிற்க முனைந்தாலும் ஆதரிக்க மறுப்பதுதான் எமது நிலைப்பாடாக இருக்கும்போது, தலித் அடையாளக்கார்களை மட்டும் நாம் ஆதரிக்க மறுப்பதில் ஒன்றும் வியப்பில்லை. இதில் எப்போதாவது ஒளிவு மறைவு இருந்திருக்கிறதா, இப்போது பட்டவர்த்தனமாவதற்கு? நாடாளுமன்ற - சட்டமன்ற சகதிக்குள் இவர்கள் விழுந்து புரளுவது குறித்து நாம் பொறாமைப்படுவதற்கும், பொறுத்துக் கொள்ள முடியாததற்கும், அவதூறு செய்வதற்கும் என்ன இருக்கிறது?

இதை புனித பாண்டியன் போன்றவர்கள்தாம் விளக்க வேண்டும். அவர்கள்தாம், ''கெட்ட வாய்ப்பாக தலித் அமைப்புகளில் ஏற்பட்ட பிளவுகளினாலும், ஆட்சி அதிகார அரசியல் விருப்பங்களினாலும், தலித் தலைவர்கள் தங்களின் 'தன் முனைப்பு'க்கு அளித்த முக்கியத்துவத்தாலும் அம்பேத்கர் சிந்தனைகளும், தத்துவார்த்த பிரச்சாரங்களும், பின்னுக்குத் தள்ளப்பட்டன. தலித் அமைப்புகள் தங்களைத் 'தேர்தல் வாக்குகளால்' அடையாளம் காட்டும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.'' *(எழுச்சி தலித் முரசு, சனவரி 2003, யாக்கன், பக். 31)* என்று எழுதினர்.

'''இந்தியாவை ஆள்வது அரசியல்வாதிகள்தான்; அவர்களுக்கு வானளாவிய அதிகாரங்கள் இருப்பதாகவும், சட்டமன்ற, நாடாளுமன்றப் பதவிகளையும் உச்சபட்சமாக அமைச்சர் பதவியை வென்றெடுத்தாலே - அரசியலதிகாரம் நம் கைக்குக் கிடைத்துவிடும்' என்று பெரும்பான்மை மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களின் எண்ண ஓட்டம் அவ்வாறு இருக்கும் வகையில் காலங்காலமாகப் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. குறிப்பாக, தலித் - ஒடுக்கப்பட்ட பிற சாதியினர் மற்றும் சிறுபான்மையின மக்களிடையே அரசியலதிகாரம், என்பது ,வெறுமனே எம்.பி.; எம்.எல்.ஏ. பதவிகளைக் கைப்பற்றுவதுதான் என்ற கருத்து, திட்டமிட்டு ஊன்றப்பட்டுள்ளது'' என்று சூன் *2004 ''தலித் முரசு''* இதழ் தலையங்கம் எழுதியது.

''தலித் அரசியல், கட்சி அரசியலாக குறுகி போவதால்தான், அதன் தொடக்க நிலையிலேயே சமரசமும் அதனைத் தொடர்ந்து சீரழிவும் ஏற்படுகிறது. ஆனால், தலித் இளைஞர்கள் பெரும்பாலும் கட்சி அரசியலுக்குத்தான் ஈர்க்கப்படுகிறார்கள். குறுகிய காலத்தில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிவிடலாம் என்ற தவறான கருத்தும் அதன் மூலம் ஒரு சில பதவிகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுமே, அவர்களை இப்(டே)பாதைக்கு இட்டுச் செல்கிறது'' என்று இந்த ஆண்டு சனவரியில் ''தலித் முரசு'' தலையங்கம் தீட்டியிருந்தது.

''தலித் முரசு'' தலையங்கம் இங்கே குறிப்பிடும் ஓட்டுக் கட்சி அரசியல் (டே)பாதைக்கு தலித் மக்களை இட்டுச் செல்லுவதைத்தான் ''சேரி மக்களுக்கு இழிவைத் தேடித் தரும் 'தலித்' தலைவர்கள்'' என்று புதிய ஜனநாயகம் எழுதியது. இப்(டே)பாதையில் அவர்களின் சந்தர்ப்பவாத சீரழிவுகளைத்தான் பு.ஜ. இடித்துரைத்திருந்தது.

தலித் அரசியல் என்பது கட்சி அரசியலாக குறுகிப் போனது; அதன் தொடக்க நிலையிலேயே சமரசமும் சீரழிவும் ஏற்படுகிறது; குறுகிய காலத்தில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி விடலாம் என்ற தவறான கருத்து - ஒரு சில பதவிகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை, தலித் இளைஞர்களை இப்(டே)பாதைக்கு இட்டுச் செல்கிறது; என்றெல்லாம் எழுதும் ''தலித் முரசு'' அதையே ''பு.ஜ.'' எழுதினால் ''தலித் மக்கள் ஆட்சி அதிகாரத்தை நோக்கி(!) ஒரு அடியெடுத்து வைத்தாலே பொறுத்

www.padippakam.com

துக் கொள்ள முடியாமல் அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர்'' என்ற அலறுகிறது!



கரடிசித்தூர் அருந்ததியர்கள் மீது பறையர் சாதி வெறியர்கள் நடத்திய பாலியல் வன்கொடுமை தாக்குதலில் கொல்லப்பட்ட வெள்ளையம்மாள் (இடது) வெள்ளையம்மாளின் தந்தை தாசன், தாயார் பொட்டியம்மாள் மற்றும் அக்கா சரோஜா (கீழ்படம்).



தலித் தலைவர்கள் தங்களின் 'தன் முனைப்பு'க்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள்; தலித் அமைப்புகள் தங்களைத் தேர்தல் வாக்குகளாலே அடையாளப்படுத்தப்படும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன என்று ஒருபுறம் புலம்பும் ''தலித் முரசு'', மறுபுறம் புதிய ஜனநாயகத்தைப் பார்த்து அரசியல் அரங்கில் தலித் அடையாளத்துடன் நிற்க முனையும் எவரையும் ஆதரிக்க மறுப்பதாக ஆவேசப்படுகிறது.

தலித் தலைவர்கள் - இயக்கங்களின் இன்றைய நிலை குறித்து இந்த ஆண்டு ஏப்ரல் ''தலித் முரசு'' தலையங்கம் எழுதியது:

*'தலித்துகளாக தலை நிமிர்வோம்' என்று சூளுரைத்து தொடங்கப்பட்ட நமது பயணம் - இன்று உட்சாதிகளாகப் பிரிந்து வெட்கித் தலை குனியும் நிலைக்கு வந்துள்ளது. அம்பேத்கர் பாதையில் அணிவகுக்கத் தொடங்கிய நாம், இன்றைக்கு ஆரியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றவர்களாக மாறிப்போனது எப்படி? ''ஒவ்வொரு உட்சாதியும் தனித் தனி சாதிகள். ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி கலாச்சாரம், வாழ்வியல் உண்டு. நாம் ஒரே அணியில் 'தலித்'தாகவோ, அட்டவணைப்படுத்தப்பட்ட சாதியினராகவோ, தொல்குடிகளாகவோ இணையவே முடியாது'' என்று அருவருக்கத்தக்க வகையில் - 'கருத்தியல்'களை உருவாக்கி வருகிறோம்.*

*சுருங்கச் சொன்னால், ஆரியம் பிரித்து வைத்த இலக்கணப்படி நின்று கொண்டு - பார்ப்பனியத்தை ஒழிப்போம் / சாதியை வேரறுப்போம் / இந்துத்துவத்தை வீழ்த்துவோம் என்று எல்லோரும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறோம் - அவ்வளவு தான். நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். ஒருபுறம் 'தலித்துகள் சாதியற்றவர்கள்' என்று முழங்கிக் கொண்டு, மறுபுறம் நம்மை தனித்த சாதிகளாகக் கற்பனை செய்து கொண்டு, இந்துக்களின் சூழ்ச்சிக்கு இரையாகிக் கொண்டிருக்கிறோம். இதைவிட அவமானமும் ஆபத்தும் வேறில்லை. நம்மீது வீசப்பட்ட மலத்தை (ஜாதியை) எப்போது நாம் ரசித்து நுகரத் தொடங்கினோமோ - அன்றே நாம் தோல்வியுற்ற மக்களாகி விட்டோம். அம்பேத்கரின் பிள்ளைகள் நாங்கள் என்று தம்பட்டம் அடிப்பதற்கு - நமக்கு மயிரளவும் அருகதை இருக்கிறதா? சுரணையுள்ள ஒவ்வொரு தலித்தும் நிலைக் கண்ணாடி முன்நின்று கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது.*

*இன்று அறிவுஜீவிகள் முன்னிறுத்தும் 'தலித்தியம்' எந்த நோக்கமும், வரையறையும் இல்லாததால் நீர்த்துப் போகத் தொடங்கியிருக்கிறது. காரணம், அம்பேத்கரியம் அதன் முதுகெலும்பாக இல்லை. தலித்துகள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; எதிரியுடனும் அணிசேரலாம் (இந்த தேர்தலில் மகாராட்டிரத்தில் இந்து மதவெறி அமைப்பான 'சிவசேனா'வுடன் இந்திய குடியரசுக் கட்சி கூட்டணி வைத்துள்ளது.) என்றொரு அவல நிலைக்கு வந்து விட்டோம். ஆம், இது அழிவின் தொடக்கமே. அதன் வெள்ளோட்டமாக தமிழகத்தில் சங்கரமடம் இனிக்கத் தொடங்கியிருக்கிறது. அது, இனிப்புத் தடவிய நஞ்சு என்பதைப் புரிந்து கொள்ள, 14 ஆண்டுகள் போதாதா? 'தலித்தியம்' இனி இதன் போக்கிலேயே சென்றால், அது அம்பேத்கரியத்திற்கு எதிராகச் சென்றுவிடும் ஆபத்தை - யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.''* (தலித் முரசு, ஏப்ரல் 2004, பக். 5)


தலித் தலைவர்கள், அமைப்புகள் இயக்கங்களின் இன்றைய நிலை குறித்து மேற்கண்ட மதிப்பீட்டைத் தலையங்கமாக எழுதியிருந்த அதே ''தலித் முரசு'' இதழில்தான் ''தலித்துகள் x ம.க.இ.க.'' என்ற பு.ஜ.வுக்கு எதிர்வினையாற்றும் நோக்கத்துடனான கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் சாதிக்கு எதிராக, சமத்துவ சிந்தனையுடன், சமூக நீதியை நிலைநாட்ட - தலித் தலைவர்களும் இயக்

**தலித் தலைவர்கள் தங்களின் 'தன்முனைப்பு'க்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள்; தலித் அமைப்புகள் தங்களைத் தேர்தல் வாக்குகளாலே அடையாளப்படுத்தப்படும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன என்று புலம்புகிறது ''தலித் முரசு''.**



படிப்பகம்

கங்களும் தீவிரமாக முனைவதாகவும், எழுச்சியுறுவதாகவும், அத்து மீறுவதாகவும் அடுக்கியிருக்கிறார்கள். எது உண்மை? "தலித் முரசு" தலையங்கமா? இல்லை, அதற்கு நேரெதிராகச் சித்தரிக்கும் "தலித்துகள் x ம.க.இ.க." கட்டுரையா?



காளப்பட்டியில் கவுண்டர் சாதி வெறியர்களின் தாக்குதலுக்கு உள்ளான தாழ்த்தப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறிய திருமாவளவன், "சாதி வெறியர்களைக் கைது செய்யாவிட்டால் போராட்டம் வெடிக்கும்" எனச் சவடால் அறிக்கையொன்றை விட்டதைத் தவிர, இந்தப் பிரச்சினையில் வேறென்ன சாதித்தார்?

மேலும் "பு.ஜ." கட்டுரையின் "ஒரு சில வரிகளைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம் ஒட்டுமொத்தக் கட்டுரையின் வன்மத்தையும் தலித் விரோதப் போக்கையும் ம.க.இ.க.வின் விஷமத்தனத்தையும் புரிந்து கொள்ளலாம்" என்று கூறி பின்வரும் ஒரு பத்தியை மேற்கோள் காட்டி இருக்கிறார்கள்.

"தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் நிலவுரிமை, பொது இடங்களில் சம உரிமை, குடிநீர், இடுகாடு, பொதுப்பாதை, கோயில் நுழைவு, தேநீர்க் கடைகளில் தனி டம்ளர்கள் போன்றவை, தீண்டாமை, பெண்களுக்கு எதிரான ஆதிக்க சாதிகளின் பாலியல் வன்முறை, கொத்தடிமை முறை மற்றும் சாதிய ஒடுக்குமுறைகள், இப்படிப் பல பிரச்சினைகளில், நக்சல்பாரி இயக்கங்கள் உயிரை கொடுத்துப் போராடி வருகின்றன." *(தலித் முரசு, ஏப்ரல், பக். 46)*

"பு.ஜ." கட்டுரையின் இந்த வரிகளில் இருந்து அப்படி என்னதான் நமது வன்மத்தையும், தலித் விரோதப் போக்கையும் ம.க.இ.க.வின் விஷமத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது? எதுவுமே கிடையாது. ஆனாலும் "தலித் முரசு" இப்படி சம்பந்தா சம்பந்தமின்றி உளறுவது ஏன்?

மேலும் "பு.ஜ."வின் இந்த வரிகள் குறித்து பொருளற்ற சொற்களை அடுக்கி சமாளிக்க எத்தணித்திருக்கிறார்கள். "அடேங்கப்பா! என்ன ஓர் அர்ப்பணிப்பு! மயிர் சிலிர்க்க வைக்கும் ஒப்பனைப்பு வார்த்தைகள். தலித் பிரச்சினைகளில் புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் செயல்பாட்டை தலித்துகளும் பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம். மறக்கமுடியாத கசப்பான வரலாற்று நினைவுகளின் வழியே 'தோழர்களே' உங்களைக் கவனமாக கண்காணித்துக் கொண்டுதான் வருகிறோம். கம்யூனிஸ்டு இயக்கங்கள் செய்து வருகின்ற துரோக வரலாற்றை, அவ்வளவு எளிதாக மறந்து விட முடியுமா?" *(தலித் முரசு, ஏப். 2004, பக். 46)*



தாழ்த்தப்பட்டவர்களுள் ஒரு பிரிவினரான அருந்ததியர் சாதிக்காக "ஆதித் தமிழர்பேரவை" என்ற அமைப்பை நிறுவி நடத்தி வரும் ரா. அதியமான், "கிருஷ்ணசாமி, திருமாவளவன் போன்றவர்களுக்கு அருந்ததியர்களின் இட ஒதுக்கீடு குறித்து முழுமையாகத் தெரியும். ஆனால், இவர்கள் இருவரும் இது வரையில் இது பற்றி வாய் திறந்து பேசவில்லை" என வெளிப்படையாகவே குற்றஞ்சுமத்துகிறார். *(ஆதாரம்: எழுச்சி தலித் முரசு, மே-2003, பக். 25)*

சரிதான்! எங்களைக் கவனமாகக் கண்காணிக்கும் "ஊழியத்"துக்காகத்தானே நீங்கள் "ஊதியம்" பெறுகிறீர்கள். ஆனால், அப்படிக் கவனமாகக் கணகாணித்து வரும் வரலாற்றில் நாங்கள் என்ன துரோகம் செய்துவிட்டோம் என்று ஒன்றையாவது எழுதியிருக்கலாம்! எழுதவில்லையே!

அதற்குப் பதிலாக ஊஞ்சனை, மேலவளவு, பரமக்குடி, செங்கல்பட்டு, தாமிரபரணி, புளியங்குடி, திண்ணியம், கவுண்டம்பட்டி, கீழ ஊரப்பனூரில் தலித் மக்கள் மீது நடந்த தாக்குதல்கள், அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு "ம.க.இ.க. செய்து கிழித்ததுதான் என்ன"வென்று கேள்வி எழுப்பி இருக்கிறது, "தலித் முரசு".

இங்கே பட்டியலிடப்படும் விவகாரங்களில் ம.க.இ.க. ஒன்றுமே கிழிக்கவில்லை என்றே வைத்துக் கொள்வோம்! தலித்துகளின் 'தலைவர்கள்', 'ரட்சகர்', 'விடுதலையாளர்' என்று ஏக போக உரிமை கொண்டாடுபவர்கள் என்னதான் கிழித்தார்கள் என்பதை இதோ "தலித் முரசு" வழியே பார்ப்போம்."

"கொடியங்குளத்தில் பள்ளர்கள் பாதிக்கப்படுகின்றபோது பறையரும், சக்கிலியரும் வேடிக்கை பார்ப்பதும், மேலவளவில் பறையர்கள் படுகொலை செய்யப்படும்போது சக்கிலியரும், பள்ளரும் வேடிக்கை பார்ப்பதும், காளப்பட்டியில் சக்கிலியர்கள் தாக்குதலுக்குள்ளாகியிருக்கும் வேளையில் - பள்ளரும், பறையரும் வேடிக்கை பார்க்கின்ற போக்கும் இனி நிறுத்தப்பட வேண்டும். *(தலித் முரசு, ஆகஸ்ட் 2004, பக்.13)*

இதிலிருந்து தெரிவதென்ன? தலித் விடுதலையே இலட்சியம் என்று சவடா

லடிக்கும் 'தலித்' தலைவர்கள், தத்தமது உட்சாதிப் பிரச்சினைகளுக்காக மட்டும் ''குரல்'' கொடுப்பதும், தலித்துகளுக்குள்ளேயே கூட பிற உட்சாதிகளுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு வேடிக்கை பார்ப்பது மாகத்தான் உள்ளார்கள். வேறு ஒன்றும் கிழித்துவிடவில்லை என்று தெரிகிறது.

தலித்துகள் தாக்கப்படும் ஒவ்வொரு சம்பவத்திலும் ''தலித்'' தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அதிகபட்சம் போனால் என்ன செய்கிறார்கள்? சம்பவம் நடந்த இடத்துக்கு தனது தொண்டர்படை பரிவாரங்களுடன் மகிழுந்துகளில் (கார்களில்) வந்து இறங்கி உருகி நின்று சவால்கள், ஆறுதல் வார்த்தைகளைத் தொடர்ந்து சவடால்கள் விட்டு செய்தி ஊடகத்தின் கவனத்தை ஈர்க்கிறார்கள். பிறகு, ஒரு ஊர்வலம் விடுகிறார்கள். அப்புறம், நினைவுநாள் கொண்டாடுகிறார்கள். இதுவே பெரிய களப்பணி என்பதாகப் பீற்றிக் கொண்டு, பிற அமைப்புகளுக்கு எதிராக சாதனையாகக் காட்டப்படுகிறது.

அதன்பிறகு, இங்கே பட்டியலிடப்படும் தலித்துகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு காரணமான ஆட்சியாளர்களிடமே தேர்தல் அரசியல் கூட்டு வைத்துக் கொண்டு (சான்றாக, கொடியங்குளத்தையும் அதைத் தொடர்ந்தும் நடந்த தலித் படுகொலைகளுக்குத் துணைநின்ற ஜெயா-சசி கும்பலிடமும், தாமிரபரணி படுகொலைகளுக்குக் காரணமான கருணாநிதியிடமும், கடலூர் - விழுப்புரம் மாவட்டங்களில் வன்னியர் சாதிவெறித் தாக்குதல்களுக்குத் துணைநின்ற இராமதாசிடம் கூட்டு வைத்துக் கொண்டு) அவர்களுக்குத் துதிபாடி, இரத்தம் சிந்திய தலித்துகளுக்குத் துரோகமிழைக்கின்றனர்.

புரட்சிகர கம்யூனிஸ்டுகளிடம் இல்லாத செயல்பாட்டை - துரோக வரலாறை கவனமாகக் கண்காணித்து வருவதாகக் கூறும் ''தலித் முரசு'' சிந்தனையாளர்களால், 'தலித்' தலைவர்களின் இந்தத் துரோக வரலாற்றை மட்டும் அவ்வளவு எளிதாக மறந்துவிட முடிகிறதே, எப்படி?

அதுமட்டுமல்ல; இந்த தலித் தலைவர்கள் தாம் தோன்றிய உட்சாதியினர், தமக்கு அடுத்த நிலையிலுள்ள உட்சாதி மக்கள் மீது தொடுக்கும் தாக்குதல்களுக்கு மட்டும் என்ன கிழித்தார்கள் என்று 'தலித் முரசு' சிந்தனையாளர்கள் எண்ணிப் பார்ப்பதில்லையே, ஏன்?

**புரட்சிகர கம்யூனிஸ்டுகளிடம் இல்லாத செயல்பாட்டை - துரோக வரலாறை கவனமாகக் கண்காணித்து வருவதாகக் கூறும் ''தலித் முரசு'' சிந்தனையாளர்களால், 'தலித்' தலைவர்களின் துரோக வரலாற்றை மட்டும் அவ்வளவு எளிதாக மறந்துவிட முடிகிறதே, எப்படி?**

● விழுப்புரம் மாவட்டம் கரடிசித்தூரில் கடந்த ஆண்டு ஆகஸ்டில் அருந்ததியர் சாதி வீரனும், பறையர் சாதி பரிமளாவும் காதலித்து, பறையரின் எதிர்ப்புக்குப் பயந்து, ஊரை விட்டு ஓடிப்போனார்கள். இதனால் ஆத்திரமுற்ற பறையர் சாதி பரிமளாவின் அண்ணனும், பிற ஐந்து பேரும் சேர்ந்து அருந்ததியர் சாதி வீரன் குடும்பத்து நான்கு இளம் பெண்கள் மீது மிகக் கொடுமையான முறையில் பாலியல் வன்கொடுமைக் குற்றம் செய்திருக்கின்றனர். இச்சம்பவத்தில் வெள்ளையம்மாள் என்ற பெண் மிகக் கடுமையாக தாக்கப்பட்டு இறந்து விட்டார்.

கரடிசித்தூரில் நடந்தது தனிப்பட்ட விவகாரமும் அல்ல. அருந்ததியர் மீது தொடரும் பறையர் சாதி ஆதிக்கத்தின் ஒரு பகுதிதான் இது. ''கீழ்ச் சாதிப் பயலான அவனுக்கு எங்க சாதிப் பொண்ணத் தொட எவ்வளவு தைரியம் இருக்கும்?'' என்றும், ''சக்கிலிச்சி, சக்கிலி நாயே, கீழ்ச்சாதி சக்கிலியனுக்கு இவ்வளவு திமிரா? கீழ்ச் சாதி சக்கிலிப் பய'' என்று கடுமையாக அருந்ததியர்களைத் திட்டியிருக்கிறார்கள். ''சக்கிலிய வீட்டுப் பெண்கள் எல்லோரும் கற்பழிக்கப்பட வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ''அருந்ததியப் பெண்கள் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிப்பதைத் தடுத்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். அருந்ததியர்கள் செத்தாக் கூட சுடுகாடில புதைக்கவிடாமல் தடுத்திருக்கிறார்கள்.''

● ''இராமநாதபுரம் மாவட்டம் காட்டுப்பரமக்குடியில், பள்ளர்சாதி அதிகாரி சாம்ராஜ், வீட்டில் வீட்டு வேலை செய்த அருந்ததிய சாதி பெண் கருப்பி, அவர் வீட்டில் நகையைத் திருடி விட்டதாகப் புகார் கொடுத்து போலீசு நிலையத்தில் சித்திரவதை செய்து கொன்று, போலீசு நிலைய வயர்லஸ் கோபுரத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்டார். சாதியைச் சொல்லி அருந்ததியர்களைப் பள்ளர்கள் ஏசியிருக்கின்றனர்.

பல்வேறு அருந்ததியர் அமைப்புகளும், பிற சமூக அமைப்புகளும் கருப்பிக்காக போராடிய போது பள்ளர்கள் ஓரணியில் திரண்டு அதை எதிர்த்துள்ளனர்.

பள்ளர் சாதி, பறையர் சாதி மக்களுக்கு எதிராக சாதி இந்துக்களின் தாக்குதல் நடக்கும்போதெல்லாம், அதை எதிர்ப்பதில் அவசியமான ஆர்வமும், முனைப்பும் காட்டும் திருமாவளவனும், கிருஷ்ணசாமியும், தலித்துக்களின் ஒரு உட்சாதியே, இன்னொரு உட்சாதி மீது வன்கொடுமை தாக்குதல் நடத்தும் போது குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களை வன்கொடுமை சட்டம் (பி.சி.ஆர்) கீழ் தண்டிக்க வேண்டும் என்றல்லவா போராடியிருக்க வேண்டும். வன்னிய சாதிப் பெண்ணும், பறையர் சாதி ஆணும் காதலித்த 'குற்றத்துக்காக' விஷம் கொடுத்துக் கொன்று எரித்த விவகாரத்தில் அப்படித்தானே கோரினார்கள். அதற்கு மாறாக, அவர்கள் வாய் மூடிக் கொண்டார்கள். *(ஆதாரம்: தலித் முரசு, அக். 2003, பக்.10-13)*

தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு ஏற்பாட்டின் கீழ் வரும் வாய்ப்புகளை எல்லாம் முன்னேறிய பிரிவினரான பறையர், பள்ளர் ஆகிய உட்சாதியினரே மிகையாக அனுபவித்து வருகிறார்கள் என்பதனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை உட்சாதிப் பிரிவின் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அருந்ததியினர் கோரி வருகிறார்கள். சாதி ஒழிப்பு, சமூக நீதி, தலித் விடுதலை பேசும் தலித் தலைவர்கள் உட்சாதி இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை ஏற்பதுதானே நேர்மையாக இருக்க முடியும். ஆனால், இவர்களோ இதிலும் மௌனம் சாதித்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

தலித் தலைவர்களின் போக்கு இப்படி இருக்கும்போது மற்றவர்களைப் பார்த்து தலித்துகளுக்காக நீங்கள் புடுங்கியது என்ன? கிழித்தது என்ன? என்று கேட்பதற்கு அவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

**(தொடரும்)**

www.padippakam.com

# நீதிமன்ற பாசிசம்

வழக்கறிஞர்களுக்கான கூடுதலான சில நன்னடத்தை விதிகளை சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்ததையடுத்து, வழக்கறிஞர்கள் தங்களின் தொழில் சுதந்திரத்துக்காக மட்டுமின்றி, நாட்டையே கவ்விவரும் நீதிமன்ற பாசிசத்துக்கு எதிராகவும் போராட வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. இந்த 25 கட்டளைகள் வழக்குரைஞர்களிடம் ஒழுக்கத்தையோ, நீதிமன்றத்தில் ஒழுங்கையோ நிலைநாட்டக் கொண்டு வரப்படவில்லை. ஊழல் நீதிபதிகள் தங்களைத் தற்காத்துக் கொள்ளக் கொண்டு வரப்பட்ட இன்னுமொரு சட்டபூர்வ கவசம்தான் இது. இன்னும் சொல்லப்போனால், நீதிபதி சுபாஷன் ரெட்டியால், நீதிபதி சுபாஷன் ரெட்டிக்காகக் கொண்டு வரப்பட்டவைதான் இந்தக் கட்டளைகள்.

''நீதிபதிகளின் செயல்பாடுகள் பற்றி விமர்சனம் செய்யக் கூடாது. நீதிமன்றத்தின் மீது அவநம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் பேசக் கூடாது. நீதிபதிகள் மீது சமூக ரீதியான வெறுப்பை ஏற்படுத்தக் கூடாது. ஊழல் புகார் சொல்லக் கூடாது. நீதிமன்ற வளாகத்தில் போராட்டமோ, உண்ணாவிரதமோ கூட நடத்தக் கூடாது. இந்தக் கட்டளைகளை மீறினால் ஓராண்டு காலத்திற்குத் தொழில் செய்யத் தடை விதிப்போம்'' என மிரட்டுகிறது, உயர்நீதி மன்றத்தின் கட்டளை.

இதன்படி வழக்குரைஞர்களின் நடத்தையைக் கண்காணிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கு உண்டு; ஆனால், நீதிபதிகளின் நடத்தையைக் கண்காணிக்கும் உரிமை வழக்குரைஞர்களுக்கு மட்டுமல்ல, யாருக்கும் கிடையாது. நீதிபதிகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட புனிதர்களாக சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகிறார்கள். இதை மீறுபவர்களை நீதிமன்ற அவமதிப்பு என்ற சட்டத்தின் மூலம் தண்டிக்கும் உரிமையும் நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வழக்குரைஞர்களை நீதிபதிகளின் கொத்தடிமைகளாக மாற்றும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ள இந்தக் கட்டளைகளைத் திரும்பப் பெறவும், சுபாஷன் ரெட்டியைப் பதவி நீக்கம் செய்யவும் வழக்குரைஞர்கள் கோரினார்கள்.

நீதிபதிகளோ, கைது, வழக்கு, பிணை மறுப்பு, வழக்குரைஞர்களின் வீடு புகுந்து போலீசார் மிரட்டுவது போன்ற அடக்குமுறைகளை ஏவி விட்டு, வழக்குரைஞர்களை மிரட்டிப் பணிய வைக்க முயன்றனர்; கீழமை நீதிமன்றங்களில் பணிபுரியும் வழக்குரைஞர்களுக்கு இந்தக் கட்டளைகளில் இருந்து விலக்களித்து, தமிழக வழக்குரைஞர்களிடையே பிளவை ஏற்படுத்திப் போராட்டத்தை உடைக்கும் கீழ்த்தரமான சதி வேலைகளிலும் மாண்புமிகு நீதிபதிகள் இறங்கினார்கள். ''டேய்... இந்தச் சட்டையைக் கழட்டினா நானும் ரௌடி தாண்டா'' என உயர்நீதி மன்ற நீதிபதி தினகரன் வெளிப்படையாகவே வழக்குரைஞர்களை மிரட்டினார். ஆனாலும், வழக்குரைஞர்களின் போராட்டத்தை அடக்கிவிட முடியாமல், நீதிபதிகள் மண்ணைத்தான் கவ்வினர்.

நீதிமன்ற பாசிசத்தை எதிர்த்து கடந்த ஒரு மாத காலமாக தமிழக வழக்குரைஞர்கள் நடத்தி வந்த போராட்டம், ''25 கட்டளைகளைத் திரும்பப் பெறுக் கொள்வதாக'' சென்னை உயர்நீதி மன்றம் அறிவித்த பிறகுதான் முடிவுக்கு வந்தது. எனினும், ''ஊழல் நீதிபதி சுபாஷன் ரெட்டியை பதவி நீக்கம் செய்ய வேண்டும்'' என்ற வழக்குரைஞர்களின் கோரிக்கை வெற்றியடையவில்லை. ''சுபாஷன் ரெட்டியின் ஊழல்கள் குறித்து உச்சநீதி மன்றம் விசாரணை நடத்துவதாக உறுதியளித்திருக்கிறது'' என வழக்குரைஞர்கள் கூறுகின்றனர்.

•••

இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடாக இருந்தபொழுது, வழக்குரைஞர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை வெள்ளைக்கார உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கு வழங்கும் சட்டமொன்று 1926-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. வழக்குரைஞர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, அந்தக் காலனியச் சட்டம் 1961-ஆம் ஆண்டு மைய அரசால் கைவிடப்பட்டது. வெள்ளைக்காரன் போட்ட ''ரௌலட்'' சட்டம், ''தடா'', ''பொடா'' என உருமாறி வந்ததைப் போல, வழக்குரைஞர்களைத் தண்டிக்க உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கு அதிகாரம் கொடுக்கும் காலனியச் சட்டமும் மறு அவதாரம் எடுத்திருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு ஏற்ப, நீதி பரிபாலன முறையும் மறுவார்ப்பு செய்யப்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காக சிவில் சட்டம் திருத்தப்பட்டது தொடங்கி பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதற்கு ஆதரவான நீதிமன்றத் தீர்ப்புகள் முடிய இதற்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம்.

இந்த நீதிமன்ற பாசிசம், வழக்குரைஞர்களை மட்டும் கொத்தடிமையாக்கவில்லை; உழைக்கும் மக்கள் அனைவரையும் ஏகாதிபத்தியங்களின் அடிமைகளாக்குகிறது; நாட்டின் இறையாண்மைக்கே ஆபத்தானதாக இருக்கிறது. இதனால், இந்த நீதிமன்ற பாசிசத்தை, வழக்குரைஞர்கள் மட்டும் தனித்துப் போராடி வெற்றி பெற்றுவிட முடியாது.

அதேசமயம், நீதிமன்ற பாசிசத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில், வழக்குரைஞர்களி

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சுபாஷன் ரெட்டியைப் பதவி நீக்கக் கோரியும், நடத்தை விதிகளைத் திரும்பப் பெறக் கோரியும் வழக்குரைஞர்கள் சங்கம் திருச்சியில் நடத்திய கண்டன ஊர்வலம்.





படிப்பகம்

www.padippakam.com

டையே கூட ஒற்றுமை இல்லாது இருந்த பலவீனத்தையும் பார்க்க முடிந்தது. சென்னை உயர்நீதி மன்ற வழக்குரை ஞர்கள் சங்கத்திற்கும், கீழமை நீதிமன்ற வழக்குரைஞர்கள் கூட்டமைப்பிற்கும் இடையே போராட்டத்தின் இறுதி வரை ஐக்கியம் ஏற்படாமல் இருந்தது. போராட்டத்தின் மிக முக்கியமான குறைபாடாகும். இந்த ஐக்கியம் ஏற்ப டாததால்தான், இந்த 25 கட்டளைகள் கீழமை நீதிமன்ற வழக்குரைஞர்களுக் குப் பொருந்தாது என்ற சில்லறை சலு கையை சுபாஷன் ரெட்டி வீசியெறிந்தவு டன், கீழமை நீதிமன்ற வழக்குரைஞர் கள் கூட்டமைப்பின் தலைமை, தன்னிச் சையாகப் போராட்டத்தைக் கைவிடுவ தாக அறிவித்தது. சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞர்கள் சங்கத்தின் கோஷ்டிகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிரபாகரன் அணியினரை உடைத்து, அதன் மூலம் போராட்டத் தைப் பிசுபிசுக்கச் செய்யவும் நீதிபதிகள் முயன்றனர்.

தமிழக வழக்குரைஞர்கள் அடக்கு முறைகளை எதிர்த்து நின்று உறுதியுடன் போராடினாலும், அவர்களிடம் நீதி மன்ற பாசிசம் குறித்த அரசியல்ரீதி யான ஒருங்கிணைந்த கண்ணோட்டம் இல்லாததால் அவர்கள் இதனைத் தங்க ளின் துறை சார்ந்த பிரச்சினையாகவே சுருக்கிப் பார்த்தனர். போராட்டமும் கூட, நீதிமன்ற வளாகத்தைத் தாண்டி எடுத்துச் செல்லப்படவில்லை. இத னால், போராட்டம் குறித்த நீதிபதிக ளின், பத்திரிகைகளின் அவதூறுகளை அம்பலப்படுத்தி, மக்களை முழுமை யாகத் தம் பக்கம் வென்றெடுக்க வழக் குரைஞர்களால் முடியவில்லை.

ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா. இ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள்தான், தமிழகமெங்கும் பல்வேறு நகரங்களில் வழக்குரைஞர்க ளுக்கு ஆதரவாகவும் நீதிமன்ற பாசிசத் துக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு, துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், தெருமுனைக் கூட்டங் கள் என அனைத்து வழிகளிலும் பிரச்சா ரம் செய்தன.

''வழக்குரைஞர்களின் போராட் டம் வெல்க; நீதிமன்ற பாசிசம் ஒழிக'' என்ற சிறு வெளியீட்டைக் கொணர்ந்து, தமிழகமெங்கும் விற்பனை செய்து, நீதி மன்ற பாசிசத்துக்கு எதிராக உழைக்கும் மக்களை அணிதிரட்ட முயன்றன.

● செல்வம்

# தலைமை நீதிபதியா? பதினெட்டுப்பட்டி நாட்டாமையா?

வழக்குரைஞர்களைக் கொத்தடிமைகளாக்கும் உயர்நீதி மன்றத்தின் 25 பாசிசக் கட்டளைகளை எதிர்த்தும், வழக்குரை ஞர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், திருச்சி ம.க.இ.க., பு.மா.இ.மு., ஆ.ஓ.பா.ச., அ.த.வி.பா.ச. ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள், ''நீதிபதியா, நிலப்பிர புவா?'' ''தலைமை நீதிபதியா, பதினெட்டுப்பட்டி நாட்டா மையா?'' ''நீதிமன்ற பாசிசம் ஒழிக!'' - எனும் முழக்கங்களுடன் கடந்த 5.8.04 அன்று காலை 11 மணியளவில் திருச்சி நீதிமன்ற வாயிலின் முன் திடீர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நீதிமன்றத் தையே அதிரச் செய்த இந்த திடீர் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த போலீசார், பெரும்படையாக வந்து முன்ன ணியாளர்கள் 7 பேரைக் கைது செய்து போலீசு நிலையத்துக்கு நடக்க வைத்தே அழைத்துச் சென்றனர். வழிநெடுக தோழர்கள் முழக்கமிட்டபடியே செல்ல, தடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம், ஊர் வலமாக மாறி மக்களின் கவனத்தை ஈர்த்தது.

பின்னர், அதே நீதிமன்ற வாயிலின்முன், பகல் 11.30 மணி யளவில் வழக்குரைஞர்கள், நீதிமன்ற பாசிசத்தை எதிர்த்தும், மதுரை உயர்நீதி மன்றக் கிளையுடன் திருச்சி மாவட்டம் இணைக்கப்பட வேண்டியதை வலியுறுத்தியும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 97 பேர் கைதாயினர். மாலையில் அவர்களைப் போலீசார் விடுதலை செய்தபோது, ''ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்களை விடு தலை செய்தால்தான், நாங்கள் வெளியில் செல்வோம்'' என்று வழக்குரைஞர்கள் உறுதியு டன் நின்றனர். பீதியடைந்த போலீசார், வேறு வழியின்றி கைதான தோழர்களை விடு தலை செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது விநியோகிக்கப்பட்ட ''தலைமை நீதிபதியா, பதி னெட்டுப்பட்டி நாட்டா மையா?'' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள், வழக்கு ரைஞர்களிடமும் பொதுமக்களிடமும் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

● ''நீதிபதிகளின் லஞ்ச ஊழல் முறைகேடுகளைத் தட்டிக் கேட்டால் வழக்குரைஞர்களுக்கே தடாவா?'' என்ற தலைப்பில் பிரசுரம் வெளியிட்டு மக்களிடம் வழக்குரைஞர்களிடமும் பிரச்சாரம் செய்த விழுப்புரம் மாவட்ட பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து 6.8.04 அன்று மாலை விழுப்பு ரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நீதிமன்ற பாசிசத்தை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. வழக்குரைஞர் களை மட்டுமின்றி, விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர் கள், இளைஞர்கள் என அனைவரையும் அடிமையாக்கும் பாசிச சட்டங்களுக்கு எதிராக ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை சிறப்புரையாற்றிய தோழர்கள் விளக்கினர்.

● சென்னையில், பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., ம.க.இ.க. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து ''நீதிபதியா, நிலப்பிர புவா?'' எனும் தலைப்பில் நீதிமன்ற பாசிசத்தை எதிர்த்து கருத் தரங்கமொன்றை நடத்தின. இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் சுபாஷன் ரெட்டியின் ஊழல் - ஒழுக்கக் கேடுகள் குறித்தும்; போராட்டம் வளர்ந்த விதம் குறித்தும் விரிவாகப் பேசினர். கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலின் கட லூர் மாவட்டச் செயலர் தோழர் ராஜு, நீதிமன்ற பாசிசத்துக்கு எதிரான வழக்குரைஞர்களின் போராட்டம், மக்கள் நலன் சார்ந்த அரசியல் போராட்டம் என விளக்கினார். கருத்தரங் கின் இறுதியாக உரையாற்றிய பு.ஜ.தொ.மு., பொதுச் செயலர் தோழர் தங்கராசு, வழக்குரை ஞர்களின் போராட்டம், மறுகா லனியாதிக்கத்துக்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட் டத்தோடு இணைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ●



விழுப்புரத்தில்...


படிப்பகம்

www.padippakam.com



## மே. வங்கம்: பட்டினிச் சாவில் பழங்குடியினர் 'இடதுசாரி' ஆட்சியின் மெத்தனம்

"பாட்டாளிகளின் ஆட்சி நடக்கும் மாநிலம்; நிலச்சீர்திருத்தம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட மாநிலம்; பொது விநியோக முறை (ரேஷன்) முறையாகச் செயல்படுத்தப்படும் மாநிலம்; மனிதவள மேம்பாட்டிலும் மக்களின் நல்வாழ்விலும் அக்கறை கொண்ட ஆட்சி நடக்கும் முன்னேறிய மாநிலம்'' என்றெல்லாம் பீற்றிக் கொள்ளப்படும் போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில், கடந்த நான்கு மாதங்களில் 5 பேர் பட்டினியால் மாண்டு போயுள்ளனர். 1942-ஆம் ஆண்டு நடந்த மிகக் கொடிய வங்கப் பஞ்சத்துக்குப் பிறகு நடக்கும் பட்டினிச் சாவுகள் இவை என்று பத்திரிகைகள் வேதனையுடன் செய்தியை வெளியிட்டுள்ளன.

கடந்த ஜூன் 25-ஆம் நாளன்று சாரதிசாபர் என்ற 55 வயது பெண், பட்டினியால் மாண்டு போயுள்ளார். "எனது தாயார் பல நாட்கள் உண்ண உணவின்றி பட்டினியால் தவித்து படுக்கையில் வீழ்ந்தார். சுட்ட பலாக் கொட்டையும் செவ்வெறும்பு சூப்பும் அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. நோய்வாய்ப்பட்ட அவரை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சிகிச்சையளிக்க எங்களுக்கு வசதியில்லை'' என்று விம்முகிறார் அவரது மகன் சாம்பு. இருப்பினும் இது பட்டினிச் சாவுதான் என்று கூற மறுக்கின்றனர் போலி கம்யூனிஸ்டு ஆட்சியாளர்கள்.



பட்டினிச் சாவுக்கு தாயைப் பறிகொடுத்த துயரத்தில் சாம்பு: போலி கம்யூனிச ஆட்சியின் மெத்தனம்.

மே. வங்கத்தின் மித்னாபூர் மாவட்டம், பன்ஸ்பாஹரி மற்றும் பெல்பாஹரி வட்டாரங்களில் லோதா, சாபர், பிர்கோர் முதலான பழங்குடியினர் ஏறத்தாழ 65 லட்சம் பேர் உள்ளனர். ஜார்கண்ட் மாநில எல்லையை ஒட்டியுள்ள காட்டுப் பகுதியில் வாழும் இவர்கள், சால்மர இலைகளைப் பறித்து பீடி தயாரிப்பாளர்களிடம் விற்றும், மரக்கோந்து, நாணல் கயிறு, கூடை, பாய்கள் தயாரித்தும் வாழ்க்கையை நடத்துகின்றனர். இவர்களுக்கு மாதம் 10 கிலோ அரிசி ரேஷனில் வழங்கப்படுகிறது. இவர்கள் போலி கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களின் மதிப்பீட்டின்படி, வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்கள். இந்தப் 'பணக்கார' பழங்குடி மக்கள் தான் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் இந்தப் பகுதியில் வறட்சியோ, கொள்ளை நோயோ இல்லை. இருப்பினும் இப்பழங்குடி மக்கள் பட்டினியால் சாகக் காரணம், போலி கம்யூனிஸ்டு ஆட்சியாளர்களின் கேடுகெட்ட கொள்கைதான்! நக்சல்பாரிகளை வேட்டையாடி ஒழித்துக் கட்டுவது என்ற கொள்கையின்படி, காட்டுப் பகுதிகளை போலீசு முகாம்களாக மாற்றி, பழங்குடியினரை காடுகளுக்குள் நுழைய மே.வங்க அரசு தடை விதித்துள்ளது. இதனால் பழங்குடியினர் பிழைக்க வழியின்றித் தத்தளிக்கின்றனர். மேலும், பழங்குடியினர் சால் இலைகளைத் தனியாரிடம் விற்கக் கூடாது; அரசாங்க கூட்டுறவு சங்கங்களிடமே விற்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கூட்டுறவு சங்கங்களில் சால் இலை அற்ப விலைக்குத்தான் வாங்கப்படுகிறது. இதனால் பழங்குடியினரின் வருவாய் குறைந்து வறுமை தலைவிரித்தாடுகிறது.

பழங்குடியினர் மேம்பாட்டுக்காக தனி வாரியம் நிறுவியுள்ள போதிலும், வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கும் பழங்குடியின மக்களை மே.வங்க அரசு ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. மாறாக, இப்பகுதியை சுற்றுலாத் துறையாக மேம்படுத்த 'இடதுசாரி' ஆட்சியாளர்கள் கோடிக் கணக்கில் வாரி இறைக்கின்றனர். பழங்குடியினர் பகுதியில் குடிநீர் - கிணறுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை எடுத்து சுற்றுலாத்துறை வளர்ச்சிக்காக கொட்டியுள்ளனர்.

மித்னாபூர் மட்டுமின்றி, புருலியா மாவட்டத்திலும் பழங்குடியின மக்கள் பட்டினியால் சாவின் விளிம்பில் உள்ளதாக செய்திகள் வருகின்றன. இது தவிர, தேயிலை இறக்குமதியால் ஏற்பட்ட விலை வீழ்ச்சி காரணமாக, மே.வங்கத்தின் பல தேயிலைத் தோட்டங்கள் மூடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினியால் பரிதவிக்கின்றனர். ஆனாலும், "மே.வங்கத்தில் வறுமை நிலவுவது உண்மைதான்; இருப்பினும் பட்டினியோ, பட்டினிச் சாவுகளோ இல்லை'' என்று கூசாமல் புளுகுகிறார் 'இடதுசாரி' முதல்வர் புத்ததேவ்.

தமிழகத்தில் தஞ்சை விவசாயிகள் பட்டினியால் மாண்ட போது, "இங்கு பட்டினிச் சாவுகளே கிடையாது'' என்று எகிறிக் குதித்த பாசிச ஜெயாவுக்கும் மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வருக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? தமிழகத்தில் அம்மாவின் 'பணப்புழக்க' ஆட்சிக்கும், மே.வங்கத்தில் போலி கம்யூனிஸ்டுகளின் 'பொற்கால' ஆட்சிக்கும் ஏதாவது வித்தியாசம்தான் இருக்கிறதா, செங்கொடியைத்தவிர!

## தாராளமயத்தின மகிமை! இன்னுமொரு தனியார் வங்கி திவால்!

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் 1990-களில் புகுத்தப்பட்ட நிதித்துறை தாராளமயத்தின் 'மகிமை'க்கு இன்னுமொரு சான்றாக "குளோபல் டிரஸ்ட் பேங்க்'' எனும் தனியார் வங்கி அண்மையில் திவாலாகிப்



படிப்பகம்

போயுள்ளது. ஏற்கெனவே யுனைடெட் இன்டஸ்ட்ரியல் பேங்க், பெனாரால் பேங்க், நெடுங்காடி பேங்க், பேங்க் ஆஃப் கரத் ஆகிய வங்கிகள் மூடப்பட்டு 'சாதனை' புரிந்துள்ள நிலையில், இப்போது இன்னுமொரு வங்கி மூடப்பட்டு 'சாதனை' முன்னேறுகிறது!

1994-இல் நிதித்துறை தாராளமயத்தின் புதிய அவதாரமாக, ரமேஷ் கெல்லி என்ற வங்கியாளரால் குளோபல் டிரஸ்ட் பேங்க் என்ற தனியார் வங்கி தொடங்கப்பட்டது. புதிய தலைமுறையினருக்கான புதுப்பாணியிலான வங்கி என்று அது விளம்பரப்படுத்தப்பட்டது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டையும், சர்வதேச நிதி கார்ப்பரேஷன் (IFC) மற்றும் உலக வங்கியிடமிருந்து நிதியையும் பெற்று இவ்வங்கியின் முதலீடு பூதாகரமாக வளர்ந்துவிட்டதாக ஊதிப் பெருக்கிக் காட்டப்பட்டது.



குளோபல் டிரஸ்ட் பேங்க் திவாலானதையடுத்து கோவையிலுள்ள அத்தனியார் வங்கிக் கிளையின் வாயிலில் பீதியுடன் திரண்ட முதலீட்டாளர்கள்: தாராளமயத்தின் மகிமை!

பங்குச் சந்தை ஊக வணிகத்துடன் நேரடியாகப் பிணைக்கப்பட்ட இந்த வங்கி, அதன் ஏற்ற இறக்கங்களால் தடுமாறத் தொடங்கியது. இருப்பினும், கொழுத்த ஆதாயத்தை ஈட்டும் வெறியோடு, பங்குச் சந்தை சூதாட்டத்தில் இறங்கியது. ஆனால், பங்குச் சந்தையோ அர்சத் மேத்தா, கேதான் பரேக் போன்ற மோசடிப் பேர்வழிகளால் ஏற்கெனவே நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருந்ததால், இந்தச் சூதாட்டத்தில் குளோபல் டிரஸ்ட் வங்கி தொடர்ந்து நட்டமடைந்தது. தமது முதலீடுகள் பாதுகாப்பாக இல்லாததை உணர்ந்த சர்வதேச நிதி கார்ப்பரேஷனும் உலக வங்கியும் தமது முதலீடுகளைத் திரும்பப் பெற்று, தாமே ஊட்டி வளர்த்த இந்த வங்கியை கைகழுவின. ஆனால், அவை திணித்த தாராளமயக் கொள்கையின் தோல்வியை இந்திய ஆட்சியாளர்களும் பொருளாதாரச் சூரப்புலிகளும் திட்டமிட்டு மூடிமறைத்து விட்டனர்.

2001-இல் பங்கு பத்திர மோசடி பற்றிய விசாரணை நடந்த போது, அதில் குளோபல் டிரஸ்ட் பேங்க்கும் சிக்கி அம்பலமாகியது. ஆனாலும் இந்திய ரிசர்வ் வங்கி அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஓராண்டுக்கு முன்பு இந்த வங்கி நட்டமடைந்து விட்டதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது. இருப்பினும், புதிய நிர்வாகிகளை அமர்த்தி இழப்புகளை ஈடு செய்து விடலாம் என்று அது நம்பியது. ஆனால், குளோபல் டிரஸ்ட் பேங்க் எழுந்து நிற்கக் கூட முடியாமல் திவாலாகி வீழ்ந்தது.

திவாலான நெடுங்காடி வங்கியை பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் இணைத்ததைப் போலவே, இப்போது திவாலான குளோபல் டிரஸ்ட் பேங்க்கை, ஓரியண்டல் பேங்க் ஆஃப் காமர்சுடன் இணைத்து, இதில் முதலீடு செய்தவர்களுக்கு பின்னர் தொகையைத் தருவதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் குளோபல் டிரஸ்ட் பேங்க்கின் தலைவர், இயக்குனர், ஊக்குனர்கள் மீதோ, இவ்வங்கியின் மோசடி பற்றி அறிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காத ரிசர்வ் வங்கி உயரதிகாரிகள் மீதோ அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோடி கோடியாய் சுருட்டிய "கோட்டு - சூட்டு" போட்ட இக்கொள்ளையர்களுக்கு எந்த தண்டனையுமில்லை. தனியார்மய - தாராளமயக் கொள்கையின் படுதோல்வியை இந்திய ஆட்சியாளர்கள் ஒப்புக் கொள்ளவுமில்லை. ●

## ஆட்டோ ஓட்டுனர்களின் போராட்டம் - போலீசாரின் ரவுடித்தனம்

"ஆட்டோவில் பள்ளிக் குழந்தைகள் 8 பேரை ஏற்றிச் செல்வதைத் தடுக்காதே! அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளைப் பறிமுதல் செய்! பெட்ரோல் - டீசல் விலையை உயர்த்தியும், பசுமை வரி, டிஜிட்டல் மீட்டர் பொருத்துவதற்கான உத்தரவைப் போட்டும் ஆட்டோ தொழிலை நசுக்காதே! குறைந்தபட்சம் கட்டணம் ரூ. 20-ம், கி.மீக்கும் ரூ. 5-ம் வாங்க உத்திரவிடு! என்.எஸ்.பி. சாலையில் ஆட்டோ ஸ்டாண்டிற்கு அனுமதி கொடு!" - என்ற கோரிக்கைகளுடன் நீண்ட காலமாகப் போராடிவரும் திருச்சி நகர ஆட்டோ ஓட்டுனர்கள், கடந்த 16.8.04 அன்று தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்புச் சங்கத்தின் தலைமையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோரிக்கைகளைப் பரிசீலிக்கக் கூட முன்வராத போலீசார், மறியலில் ஈடுபட்ட முன்னணியாளர்களான 44 ஆட்டோ ஓட்டுனர்களைக் கைது செய்து ஆபாசமாக ஏசி மிருகத்தனமாக வதைத்தனர். திருச்சி கோட்டை, போலீசு நிலைய ஆய்வாளர் கந்தசாமி, துணை ஆய்வாளர் சுகுமார் தலைமையிலான போலீசார் 10-க்கும் மேற்பட்ட ஆட்டோக்களின் மேற்கூரைகளையும் இருக்கைகளையும் பிளேடால் கீறி நாசப்படுத்தியுள்ளனர். மேலும், பறிமுதல் செய்த 30 ஆட்டோக்களில் 23-ஐ மட்டும் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்துவிட்டு, மீதி 7 ஆட்டோக்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இதுவும் போதாதென்று, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும், போலீசு வாகனத்தை நாசப்படுத்தியதாகவும் பொய் வழக்கு சோடித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது 44 ஆட்டோ ஓட்டுனர்களும் துணிவாக நீதிபதி முன் கோட்டை போலீசாரின் இந்த ரவுடித்தனத்தையும் அடக்குமுறைகளையும் புகார் செய்தனர்.

- பு.ஜ. செய்தியாளர், திருச்சி.

www.padippakam.com

# ஊழல் கொள்ளைக்கு எதிராக ஒரு தனிமனிதனின் போராட்டம்

சென்னை - எண்ணூரில் ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் கட்டப்பட்ட நாட்டின் மிகப் பெரிய 12-வது துறைமுகத்தை பிப்.2001-இல் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் திறந்து வைத்தார். தமிழகத்திலிருக்கும் அனல்மின் நிலையங்களுக்கு தேவைப்படும் 1.60 கோடி டன் நிலக்கரி இங்கிருந்துதான் அனுப்பப்படுகிறது.

கப்பலில் வரும் நிலக்கரியைத் தேவைப்படும் மின் நிலையங்களுக்கு அனுப்ப ஹாப்பர் (Hopper) என்ற கருவி மூலம் 'கன்வேயர்'களுக்கு மாற்றப்படுகிறது. சென்னை - எண்ணூர் அனல் மின் நிலையம் சார்பில், இந்த ஹாப்பர் தயாரிப்பதிலும் அது தொடர்பான ஊழலிலும் சுமார் ஒரு கோடி ரூபாயை விழுங்கியுள்ளது, அவ்வாலையின் அதிகார வர்க்க கும்பல்.

ஹாப்பர் தயாரிப்பதற்கான வடிவமைப்பு மற்றும் வரைவு பணியில் ஆரம்பித்து, ரெசிப்புரோகேட்டிங், ப்ளேட்ஃபீடர் மற்றும் ட்ரஃப் (Receiprocating, plate feeder, truff) போன்ற பணிகளிலும் அதனுடன் தொடர்புடைய டஸ்ட் சீல் காலர்கள், பிளம்மர் பிளாக்குகள் மற்றும் ஹாப்பர் பேனல் கட்டுமானம் வரை பெரும் ஊழல் நடந்துள்ளது.

தலைமை கண்காணிப்புப் பொறியாளர் மீனாட்சி சுந்தரம், தலைமை பொறியாளர் தனசீலன் ஆகியோர் ஹாப்பர் தயாரிப்பு வேலைக்கான ஒப்பந்த நிறுவனமான ''மெசர்ஸ் ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்'' உடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளையில் ஈடுபட்டனர். 6 ஹாப்பர்கள் தயாரிப்பதற்கான 299.230 டன் இரும்புக்குப் பதில் 373.226 டன் என்று பொய் கணக்கு எழுதியுள்ளனர். இதேபோல் ஹாப்பர் பேனல் கட்டுமானத்திலும் 117.430 டன் இரும்புக்குப் பதிலாக, 150.372 டன் என்று திருட்டுக் கணக்கு எழுதியுள்ளனர். வெளிச் சந்தையில் ஒரு டன் இரும்பின் விலையோ 35,000 ரூபாய்; இப்படி இரும்பிலேயே ரூபாய் 40 லட்சம் வரை கொள்ளையடித்துள்ளனர். வடிவமைப்பு மற்றும் வரைவு பணிக்கு வெறும் 25,000 ரூபாய் செலவு செய்துவிட்டு, ரூபாய் 7 லட்சம் என்று கணக்கு எழுதியுள்ளனர். ஒரு ஹாப்பர் வேலைக்கு 3 போலி ஆவணங்களை தயாரித்துள்ளனர். இதன் மூலம் ஹாப்பர் வேலைக்கான கூலி என்று 6 லட்சம் ரூபாய் சுருட்டப்பட்டுள்ளது.

உயரதிகார கும்பலின் இக்கொள்ளையை ஆரம்பத்திலிருந்தே தனிமனிதராக எதிர்த்து வருகிறார், அங்கு பணிபுரியும் இயந்திரவியல் உதவி பொறியாளர் எஸ். வைரமணி.

தொடக்கத்திலிருந்து ஹாப்பர்கள் திட்ட பொறுப்பை கவனித்து வந்த வைரமணி, அதிகாரிகளின் கொள்ளையை உறுதியாக எதிர்த்ததால், ஏராளமான தொல்லைகளுக்கு ஆளானார்; அப்பிரிவிலிருந்தும் மாற்றப்பட்டார். நியாயமாக கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு, பதவி உயர்வு பறிக்கப்பட்டு பழிவாங்கப்பட்டார். இருந்தும், உறுதி குலையாமல், தன்னுடைய உயிருக்கும் பணிக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் தமிழ்நாடு மின்சார வாரிய நிர்வாகத்தின் மீது, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

ஊழல் - கொள்ளையை மெய்ப்பிக்கும் ஆவணங்களை பலமுறை துறை சார்ந்த மேலதிகாரிகளிடம் சமர்பித்துள்ளார். கடைசியாக, தமிழக தலைமைச் செயலர் லட்சுமி பிரானேஷ் முன்னிலையில் முறைகேடுகளை ஆதாரங்களுடன் 14.1.2004 அன்று சமர்ப்பித்தார். ஆனாலும், கடைசி வரையில் ஊழல் - கொள்ளை அதிகாரிகள் தண்டிக்கப்படவேயில்லை; அவர்களுக்கு எதிராக ஒரு துரும்பும் அசையவில்லை.

எனவே, 12.8.2004 அன்று எண்ணூர் அனல் மின் நிலைய வாயிலின் முன் உண்ணாவிரதம் இருக்க திரு. வைரமணி முடிவெடுத்தார். முதலில் இதற்கு அனுமதி வழங்கிய எண்ணூர் உட்கோட்ட போலீசு, பின்னர், ''தற்போது அனுமதி மறுக்கப்படுகிறது'' என்று உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அதிகாரபூர்வமாகத் தடைவிதித்தது.

போலீசின் எச்சரிக்கையைக் கண்டு கலங்காத வைரமணி, ''தலையை மொட்டையடித்துக் கொள்ளும் போராட்டமாக'' மாற்றி தலைமுடியை மழித்துக் கொண்டு அதேநாளில், அதே இடத்தில் போராட்டத்தை நடத்தியுள்ளார்.

நீதி வெல்ல வேண்டும்; பொது வாழ்வில் நேர்மை வேண்டும்; நாட்டில் லஞ்சம் - ஊழல் ஒழிக்கப்படவேண்டும் என்ற உயர்ந்த விழுமியங்களுடன் வாழும் இந்தியக் குடிமகன்தான் திரு. வைரமணி. அவரைப் போலவே இந்தியச் சட்டம் மற்றும் நீதித்துறையின் மீது நம்பிக்கை வைத்து தனிநபர்களாகப் போராடிய பலர் தொடர்ந்து ஏமாந்தவர்களாகவே உள்ளனர்.

குஜராத் நீதிமன்றத்தில் லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கே அரஸ்ட் வாரண்ட் பிறப்பித்த சம்பவம், நீதித்துறையின் ஊழலை வெளிச்சம் போட்டுக் காட்டு

ஊழல் கொள்ளைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய உதவிப் பொறியாளர் திரு. வைரமணி.






படிப்பகம்

கிறது. அதிகார வர்க்கமோ, சட்டத்தின் பெயரால் மக்களின் எஜமானர்களாக வரம்பற்ற அதிகாரத்துடன் ஆட்டம் போடுகிறது. அதிகாரிகளோ, நீதிபதிகளோ, போலீசோ சட்டத்தின்படி மக்களுக்குப் பொறுப்பானவர்களோ, மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களோ அல்ல. திரு.வைரமணி வெளிக் கொணர்ந்துள்ள ஊழலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இதே சட்டத்தின் மீது 'நம்பிக்கை' வைத்து, ஓடி ஒளிந்து விடாமல் இன்னமும் 'பணி' செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இன்றைய அரசியலமைப்பு வழிமுறைகளில் - சட்டத்தின்படியோ, நீதியின்படியோ ஊழலைத் தடுக்கவோ, குற்றவாளிகளைத் தண்டிக்கவோ ஒருபோதும் சாத்தியமில்லை.

ஊழல் குற்றவாளிகளை மக்களே நேரடியாகத் தண்டிக்கும் அதிகாரத்தைப் பெறுவதுதான், ஊழல் - மோசடிகளைத் தடுத்து முறியடிப்பதற்கான முதல் நிபந்தனையாகும். இதற்கான புரட்சிகர அரசியல் - அமைப்பு நடவடிக்கைகளிலும் மக்கள்திரள் இயக்கங்களிலும் வைரமணி போன்றோர் தம்மை இணைத்துக் கொண்டு போராடுவதே இன்றைய தேவையாக உள்ளது.

தகவல் தொகுப்பு: இளந்தீபன்

# "கல்விக் கொள்ளைக்குத் தீ வைப்போம்"!

## — புரட்சிகர அமைப்புகளின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

இலவசக் கல்வியை அடிப்படை உரிமையாக்கவும், தனியார் பள்ளிகளை இழுத்து மூடி, கல்விக் கொள்ளையர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரியும், குடந்தையில் தீயில் கருகி மாண்ட பள்ளிக் குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தியும் தனியார் கல்விக் கொள்ளைக்கு எதிராக புரட்சிகர அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

**வேலூரில்** 28.7.04 அன்று நகராட்சி அலுவலகம் முன்பாக ம.க.இ.க. கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பெண்கள் - குழந்தைகள் உள்ளிட்டு திரளாக தோழர்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தைப் பார்வையிட்ட பொதுமக்களை, அருகே நிற்க விடாமல் போலீசு விரட்டியத்து, தனது வக்கிரத்தைக் காட்டியது. இருப்பினும், விண்ணதிர முழக்கங்களோடு எழுச்சியுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களை ஈர்த்துப் புரட்சிகர அரசியலை விதைத்தது.

**நெய்வேலியில்** 2.8.04 அன்று மாலை மந்தாரக்குப்பம் பேருந்து நிலையம் அருகே பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ''மற்ற கட்சிக்காரனெல்லாம் கண்ணீர் அஞ்சலி செலுத்துறான்; நீங்க மட்டும் எதுக்குயா கண்டன ஆர்ப்பாட்டம் செய்யணும்?'' என்று கேட்டு போலீசார் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். பின்னர் போலீசு துணை கண்காணிப்பாளரிடம் போராடி அனுமதி பெறப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில், தனியார் கல்விக் கொள்ளையின் கோர விளைவுதான் கும்பகோணம் படுகொலை என்ற உண்மை அம்பலமாவதைக் கண்டு பீதியடைந்த போலீசார், அரசை விமர்சித்துப் பேசக் கூடாது என்று எச்சரித்து நெருக்கடி கொடுத்தனர். இத்தகைய உருட்டல் - மிரட்டல்களையும் மீறி நடந்த இந்த ஆர்ப்பாட்டம், கும்பகோணம் தீயின் புகைமூட்டத்தில் மறைக்கப்பட்ட உண்மைகளை மக்களிடம் வெளிச்சம் போட்டுக் காட்டித் தனியார்மயத்துக்கு எதிராகப் போராட மக்களை அறைகூவுவதாக அமைந்தது.

**திருவெண்ணெய் நல்லூர் வட்டம்** அரசூரில் - நாலுரோடு சந்திப்பில் 2.8.04 அன்று தனியார் கல்விக் கொள்ளைக்கு எதிராக வி.வி.மு. கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கும்பகோணம் பள்ளியில் குழந்தைகளை எரித்த தனியார்மயத் தீ, பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் - தொழிலாளர்களின் வாழ்வை நாசமாக்கி பட்டினிச் சாவுக்கும் தற்கொலைக்கும் தள்ளியுள்ளது என்றும் தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிராகப் போராடுவதே தீயில் கருகி மாண்ட குழந்தைகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய தோழர்கள் குறிப்பிட்டனர். ஏறத்தாழ 3 மணி நேரம் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், விவசாயிகளிடம் தனியார்மயத்துக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தியது.

●



வேலூரில்..


அரசூரில்...

# விவசாயிகள் தற்கொலை: தாராளமயத்தின் கோரத் தாண்டவம்

மன்மோகன் சிங் இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன், ஆந்திராவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் கூறியதுதான், அவரது முதல் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சியாக அமைந்தது. தரகு முதலாளிகளின் சங்கமான "சி.ஐ.ஐ." மாநாட்டில் உரையாற்றுவது; பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டத்தில் கலந்து கொள்வது; ஆந்திர விவசாயிகளைச் சந்திப்பது என மூன்று நிகழ்ச்சி நிரல்களை அதிகாரிகள் சொன்ன பொழுது, பிரதமர் மன்மோகன் சிங் மற்ற இரண்டையும் புறக்கணித்துவிட்டு, ஆந்திர விவசாயிகளைச் சந்திப்பதைத் தனது முதல் நிகழ்ச்சியாகத் தேர்ந்தெடுத்தாராம்.

மன்மோகன் சிங் தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் முதல் பட்ஜெட், கிராமப்புற வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் பட்ஜெட் எனப் பாராட்டப்படுகிறது. நிதியமைச்சர் ப. சிதம்பரம் வங்கிக் கிளைகளுக்கு நேரடியாகச் சென்று, சாமானிய மக்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறதா எனக் கண்காணிக்கிறார். காங்கிரசு கூட்டணி ஆட்சி, முந்தைய பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இருந்து மாறுபட்டது எனக் காட்டிக் கொள்ள இப்படி நடத்தும் பல "ஸ்டண்டு"களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

சிறைக் கொட்டடியில் அப்பாவிகளை "லாடம்" கட்டி அடிக்கும் போலீசார்தான், அடித்து ஓய்ந்த பிறகு, அந்த அப்பாவிக்குப் பிரியாணி பொட்டலம் வாங்கிக் கொடுப்பார்கள். அப்படிப்பட்ட போலீசின் கருணையோடு தான், காங்கிரசு கூட்டணி ஆட்சி விவசாயிகளின் மீது காட்டும் திடீர் கரிசனத்தை ஒப்பிட முடியும். இதைப் புரிந்து கொள்ள இன்னும் ஐந்து ஆண்டுகள் காத்திருக்கத் தேவையில்லை. மத்தியப் பிரதேச மாநிலத்தில் திக்விஜய் சிங் தலைமையில் நடந்த காங்கிரசு ஆட்சியின் "சாதனை"களைப் புரட்டிப் பார்த்தாலே போதும்!

●●●

இந்தியாவை "ஒளிர" வைக்க பா.ஜ.க., என்னென்ன திட்டங்களை நடைமுறைப்படுத்தியதோ, அதே திட்டங்களை தான் காங்கிரசு கட்சியும் மத்தியப் பிரதேசத்தை "ஒளிர" வைக்க நடைமுறைப்படுத்தியது. ஆந்திராவைப் போல மத்தியப் பிரதேசத்தில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நடக்கவில்லைதான்; எனினும், சர்வதேச நிதி நிறுவனங்கள் போட்ட உத்திரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அம்மாநிலத்தின் முன்னாள் முதல்வர் திக் விஜய் சிங் காட்டிய அக்கறையைக் குறைத்து மதிப்பிட்டு விட்டு விட முடியாது.

1998-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் மத்தியப் பிரதேச மாநில ஆட்சியைக் கைப்பற்றிய காங்கிரசு கட்சி, அதற்கு அடுத்த ஆண்டே, ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 1,100 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்றது. மத்தியப் பிரதேசத்தின் மூல வளங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட இந்தக் கடன், "மத்தியப் பிரதேச மூலவள மேலாண்மைத் திட்டம்" என அழைக்கப்பட்டது. ஏகாதிபத்திய தொண்டு நிறுவனங்கள் விபச்சாரத்தை "பாலியல்

மத்தியப் பிரதேச அரசு பாலின் விலையை உயர்த்தியதைக் கண்டித்து, போபால் நகரைச் சேர்ந்த சிறுவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

தொழில்'' என பாலிஷாக அழைப்பதில்லையா? அதுபோல்தான் இதுவும்.

ஆசிய வளர்ச்சி வங்கி இந்தக் கடனைக் கொடுப்பதற்கு முன்பே அதற்குரிய நிபந்தனைகளை விதித்தது. ''மத்தியப் பிரதேச மாநில அரசுக்குச் சொந்தமான 14 பொதுத்துறை நிறுவனங்களை இழுத்து மூட வேண்டும்; அந்நிறுவனங்களில் வேலை பார்த்து வரும் 16,500 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டும். மாநில அரசால் நடத்தப்பட்டு வரும் சேவைத் துறைகளில், குறிப்பாக, போக்குவரத்துத் துறையிலும், மின்சார வாரியத்திலும் தனியார்மயத்தைப் புகுத்த வேண்டும்; இந்த 1,100 கோடி ரூபாய் கடனைப் பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் இயந்திரங்கள் / பொருட்களை வாங்குவதற்குத்தான் பயன்படுத்த வேண்டுமேயொழிய, உள்நாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களை வாங்கப் பயன்படுத்தக் கூடாது'' - இப்படிப்பட்ட பல நிபந்தனைகளோடு, மாநில அரசின் பட்ஜெட் உரை எப்படி இருக்க வேண்டும்; மாநில சட்டமன்றத்தில் என்னென்ன திட்டங்களை அறிவிக்க வேண்டும்? புதிதாக என்னென்ன சட்டங்களைப் போட வேண்டும்? என்பதைக் கூட, ஆசிய வளர்ச்சி வங்கியே காங்கிரசு அரசுக்கு வகுத்துக் கொடுத்தது.

இந்த 1,100 கோடி ரூபாய் கடனை 1999-ஆம் ஆண்டு இறுதியில் வாங்கிய காங்கிரசு அரசுக்கு, அடுத்த ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, 1,350 கோடி ரூபாய் பெறுமான இன்னொரு கடனை கொடுக்க ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புக் கொண்டது. ஆசிய வளர்ச்சி வங்கி முதல் கடனைக் கொடுப்பதற்கு விதித்த நிபந்தனைகளை காங்கிரசு அரசு எந்தளவிற்கு இம்மி பிசகாமல் நடைமுறைப்படுத்தியிருக்கும் என்பதை இதிலிருந்தே யூகித்துக் கொள்ளலாம்.

1,350 கோடி ரூபாய் பெறுமான இந்த இரண்டாவது கடன், மிகவும் வெளிப்படையாக, மின்சார வாரியத்தைத் தனியார்மயமாக்க வேண்டும் என்ற திட்டத்திற்காகவே கொடுக்கப்பட்டது. இந்தக் கடனை வாங்கிய கையோடு, பத்தரை இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை அடியோடு ரத்து செய்தார், திக்விஜய் சிங். சந்தைதான் மின் கட்டணத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்ற பெயரில் மின்சார நுகர்வுக் கட்டணங்கள் பல மடங்கு உயர்த்தப்பட்டன. விவசாய பம்ப் செட்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரக் கட்டணம், 2001, 2002 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் பலமுறை பலமடங்கு உயர்த்தப்பட்டன. மின் கட்டணத்தைச் செலுத்தத் தவறிய விவசாயிகளின் மின் இணைப்புகள் உடனடியாகத் துண்டிக்கப்பட்டன.



ஏழு வருடங்களுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்ட தனது கணவர் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் மகாராஷ்டிரா மாநிலம் விதர்பா பகுதியைச் சேர்ந்த பருத்தி விவசாயி சரசுவதி அம்பார்வார்.

காங்கிரசு அரசு 2003-ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச மாநில சட்டமன்றத்தில் சமர்பித்த வெள்ளை அறிக்கையில், அம்மாநிலத்தில் இருந்த 12 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகளில், 6 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகளின் மின் இணைப்பு, மின்சாரக் கட்டணம் கட்டத் தவறியதால் துண்டிக்கப்பட்டதாக குறிப்பிட்டது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் கட்டளைப்படி மின்சாரத் துறையைத் தனியார்மயமாக்குவதற்காக, மத்தியப் பிரதேச மின்சார ஒழுங்குமுறை வாரியம் என்ற அதிகார வர்க்கக் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த வாரியம் 'சுதந்திரமாக' இயங்க வேண்டும் என்பதற்காக, மாநில அரசின் கட்டுப்பாடு, கண்காணிப்பில் இருந்து இவ்வாரியம் சட்டபூர்வமாக விலக்கி வைக்கப்பட்டது. அதேசமயம், இந்த வாரியத்திற்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவது என்ற பெயரில், பிரிட்டிஷ் அரசின் சர்வதேச வளர்ச்சித் துறையும், கனடா நாட்டைச் சேர்ந்த எஸ்.என்.சி. லாவாலின் என்ற நிறுவனமும், மின்சார ஒழுங்குமுறை வாரியத்தைத் தங்களின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் 10.5 இலட்சம் குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு - இலவச மின்சாரம் வழங்குவதற்கு அம்மாநில அரசு கொடுத்துவந்த மானியம் 35 கோடி ரூபாய்தான். ஆனால், மின் வாரியத்தைத் தனியார்மயமாக்குவதற்காக தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கிய பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட சேவைக் கட்டணமோ ஏறத்தாழ 60 கோடி ரூபாய்.

பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி, விவசாய பம்ப் செட்டுகளுக்கு வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை பல மடங்கு உயர்த்திய காங்கிரசு அரசு, கோகோ - கோலா உள்ளிட்ட பல பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரி விலக்கு அளித்ததன் மூலம் 350 கோடி ரூபாயை மானியமாகத் தூக்கிக் கொடுத்தது.

மின் துறையில் தனியார்மயத்தைப் புகுத்தியது, பன்னாட்டு தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனங்கள் மக்களின் வரிப்பணத்தைத் தின்று தீர்ப்பதற்குத்தான் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததேயொழிய, மின் உற்பத்தியிலோ, மின் விநியோகத்திலோ எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்த



படிப்பகம்

www.padippakam.com

வில்லை. எவ்விதமான முன்னறிவிப்பும் இன்றி திடீர் திடீரென மின் விநியோகம் நிறுத்தப்பட்டதால், மத்திய பிரதேச மாநிலம் முழுவதும் கடந்த மூன்று ஆண்டுகளில் பலமுறை இருளில் மூழ்கிப் போனது. அம்மாநில உயர்நீதிமன்றம், தனியார்மயத்தின் பின் மின் விநியோகத்தில் நடந்துவரும் குளறுபடிகள் பற்றி மையப் புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டும் என உத்திரவு போட்டுள்ளதென்றால், தனியாரின் தொழில்நுட்ப திறமை குறித்து வேறெதுவும் சொல்லத்தேவையில்லை.

2003-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில், காங்கிரசு ஆட்சியில் மின்சாரத் துறையில் நடந்த முறைகேடுகள் - குளறுபடிகளைப் பா.ஜ.க. பிரச்சாரம் செய்துதான், காங்கிரசைத் தோற்கடித்தது. ஆனால், பா.ஜ.க., ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, மின்சாரத்தையும், போக்குவரத்தையும் மட்டுமின்றி, நீர்வள ஆதாரங்களையும் தனியார்மயமாக்கும் திட்டத்தை நாலுகால் பாய்ச்சலில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

அம்மாநிலத்தில் உள்ள போபால், இந்தூர், உஜ்ஜயினி, குவாலியர், ரத்லம், ஜபல்பூர் ஆகிய ஆறு நகரங்களில் குடிநீர் வழங்குவது, குப்பை வாருவது ஆகிய சேவைகளை மேம்படுத்துவதற்காக உலக வங்கியிடமிருந்து 1,000 கோடி ரூபாய் கடனாகப் பெற்றுள்ளது பா.ஜ.க. அரசு. இந்த ஆறு நகரங்களிலும் உள்ள தெருக் குழாய்களை 2009-க்குள் முற்றிலுமாக ஒழித்துவிட வேண்டும்; இல்லையென்றால், அக்குழாய்களுக்கு மீட்டர் பொருத்த வேண்டும் என்பது இந்தக் கடனைக் கொடுப்பதற்கு உலக வங்கி விதித்துள்ள முக்கியமான நிபந்தனை. இனி ஒருவாய் தண்ணீர் குடிப்பதற்குக் கூட கையில் காசிருக்க வேண்டும் என்ற பச்சையான தனியார்மயத்தைதான் இந்து ராஷ்டிரவாதிகள் அம்மாநிலத்தில் உருவாக்கி வருகிறார்கள்.

''இந்து ராஷ்டிரத்தின் பரிசோதனைக் களம்'' என ஆர்.எஸ்.எஸ். கும்பலால் பெருமையாக அழைக்கப்படும் குஜராத்திலோ, தனியார்மயத்தால், சிறு, நடுத்தர விவசாயிகள் போண்டியாகி, நிலத்தைவிட்டு வெளியேறுவது காட்டுத் தீ போல படர்ந்து வருகிறது.

வடக்கு குஜராத்தைப் பொருத்தவரை நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்தாமல் விவசாயமே செய்ய முடியாது. அம்மாநிலத்தில் ஏற்கெனவே பம்ப் செட்டுகளுக்கான மின் கட்டணம் (ஒரு குதிரை சக்தி மோட்டாருக்கு ரூ. 350/-) மிக அதிகம். மின்சார வாரியத்



**ஆந்திர மாநில விவசாயி ஜனாரெட்டியின் மருத்துவக் கடன் மட்டும் ரூ. 3 இலட்சத்தைத் தாண்டியது. எனினும், தனியார் மருத்துவமனையால் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.**

தைத் தனியார்மயமாக்கும் நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டு, ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து மோடி அரசு 1000 கோடி ரூபாய் கடன் வாங்கியவுடன், பம்ப் செட்டுக்கான மின் கட்டணம் ரூ. 1,050/- ஆக உயர்த்தப்பட்டது. இந்தக் கட்டணக் கொள்ளையை எதிர்த்து விவசாயிகள் போராடிய பின், மின் கட்டணத்தை ரூ. 750/- ஆகக் குறைத்து, முன்னைக் காட்டிலும் இரு மடங்காக நிர்ணயித்தது மோடி அரசு.

உரம், பூச்சி மருந்து, விதை ஆகிய உள்ளீடு பொருட்களின் விலையேற்றத்தையும்; இறக்குமதியாகும் விலை மலிவான விவசாய விளைபொருட்களின் போட்டியையும் சமாளிக்க முடியாமல், ஏற்கெனவே தடுமாறிக் கொண்டிருந்த குஜராத் விவசாயிகளுக்கு இந்த மின் கட்டண உயர்வு மரண அடியாக விழுந்தது.

குஜராத்தில் 20 குவிண்டால் கோதுமையை விளைவிக்க சராசரியாக ரூ.250/- செலவு பிடித்தால், அந்த கோதுமை வெளிச் சந்தையில் ரூ. 120-க்குத்தான் விலை போகிறது. இந்த நட்டத்தைத் தாங்கிக் கொண்டு யாரால்தான் விவசாயத்தைத் தொடர முடியும்? 60 சதவீத வட்டிக்கும், 120 சதவீத வட்டிக்கும் கடன் வாங்கியிருந்த விவசாயிகள் வாங்கிய கடனை அடைக்க நிலத்தை விற்றுவிட்டு வெளியேறி ஓடும் அவலத்தைத்தான் இன்று குஜராத்தின் கிராமப்புறங்களில் காண முடிகிறது.

இந்தியாவிலேயே தொழில்துறை வளர்ச்சியில் முதலிடத்தில் இருப்பதாகக் கூறப்படும் மகாராஷ்டிரா மாநிலத்தைக் கூட இந்த அவலம் விட்டு வைக்கவில்லை. அம்மாநிலத்தில் பருத்தி விவசாயத்துக்குப் பெயர் போன விதர்பா பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்குள் 45 பருத்தி விவசாயிகள் பூச்சி மருந்தைக் குடித்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

●●●

**பொ**ருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில், விவசாயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தப் பேரழிவு விவசாயிகளை ஓட்டாண்டிகளாக ஆக்குவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. ஏற்கெனவே நிலவிவரும் கிராமப்புற சமூகப் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி வருகிறது.

● ஆந்திராவின் நளகொண்டா மாவட்டத்திலுள்ள முகுந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த பங்காரு ராமாசாரி, உழவர்களுக்குத் தேவைப்படும் ஏர், கலப்பை செய்து தரும் தச்சர். கடந்த மூன்று ஆண்டுகளில் அவர் புதிதாக ஒரு ஏர் - கலப்பையைக் கூடத் தனது பட்டறையில் தயாரிக்கவில்லை. விவசாயம் நசிவடைந்ததையடுத்து அவரது தொழிலும் முடங்கிப் போனது. கடந்த மூன்று ஆண்டுகளாக அரைப் பட்டினி, முழுப் பட்டினி என வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்த பங்காரு ராமாசாரி, இரண்டு மாதங்களுக்கு முன்பு பட்டினிக்குப் பலியானார். விவசாயத்தை நம்பியிருக்கும் கிராமப்புற கைத்தொழில்கள் அழிந்து வருவதற்கு இது ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

● கிராமப்புற விவசாயக் குடும்பப் பெண்களுக்கு தாராளமயம் பேய்க் கனவு போன்றது. கடனை அடைக்க முடியாமல் ஆண்கள் தற்கொலை செய்து கொண்ட பிறகு அல்லது ஆண்கள் வேலை தேடி கிராமத்தை விட்டு வெளியேறிச் செல்லும் பொழுது பெண்களின் தலையில்தான் குடும்ப பாரம் முழுவதும் விழுகிறது. கந்து வட்டிக்காரனின் மிரட்டல், வேலையின்மை, வறுமை, பட்டினி என்ற இந்தக் கொடுமைகளைச் சகித்துக் கொள்ள முடியாமல் பெண்களும் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

ஆந்திராவின் ஆனந்தபூர் மாவட்டத்தில் மட்டும், 2001-ஆம் ஆண்டில் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 311 பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதை அரசாங்க மருத்துவர் ரமாதேவி ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியுள்ளார்.

''பாலியல் பலாத்காரப்படுத்து



படிப்பகம்

www.padippakam.com



**கந்து வட்டிக்காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட பெத்த நரசம்மா (புகைப்படத்தில் இருப்பவர்)வின் குடும்பத்தினர். அரசின் ஆணாதிக்கக் கண்ணோட்டம் காரணமாக, இவரது மரணத்தை ''விவசாயிகள் தற்கொலை'' என்ற பிரிவுக்குள் சேர்க்க அதிகார வர்க்கம் மறுத்து விட்டது.**

வேன்'' என கந்துவட்டிக்காரன் மிரட்டியதால் தற்கொலை செய்து கொண்டவர்கள்; பேசிய வரதட்சனை கொடுக்க முடியாமல் திருமணம் நின்று போனதால், இனியும் குடும்பத்திற்கு பாரமாக இருக்க வேண்டாம் எனத் தற்கொலை செய்து கொண்ட இளம் பெண்கள்; வறுமை காரணமாகப் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தியதால் தற்கொலை செய்து கொண்ட இளஞ் சிறுமிகள் எனப் பலரும் இதில் அடக்கம் என்கிறார் மருத்துவர் ரமாதேவி. ஆனால், அரசின் ஆணாதிக்கக் கண்ணோட்டம் காரணமாக பெண்களின் இத்தற்கொலைச் சாவுகளை, ''விவசாயிகள் தற்கொலை'' என ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது.

''ஜன விஞ்ஞான வேதிகா'' என்ற சேவை அமைப்பைச் சேர்ந்த மருத்துவர் ஜெயானந்த், ''ஆந்திர விவசாயிகளின் தற்கொலைக்கும், பொது சுகாதார சேவை தனியார்மயமாக்கப்பட்டு வருவதற்கும் கூட நேரடித் தொடர்புண்டு'' என்கிறார். ''தனியார்மயத்தின் பின் அரசாங்க மருத்துவமனைகளை - ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசாங்கம் சுத்தமாகக் கை கழுவி விட்டது. அதனால், மலேரியா போன்ற சாதாரண நோய்களுக்குக் கூட தனியார் மருத்துவமனைகளுக்குத்தான் செல்ல வேண்டிய நிலை உருவாகி வருகிறது. அங்கு காலடி எடுத்து வைத்தாலே, விவசாயிகளின் கடன் சுமை தானாக எகிறி விடும்'' எனக் குறிப்பிடுகிறார், ஜெயானந்த்.

கடன் சுமையைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வது தொடங்கி குடும்பம் குடும்பமாகக் கொத்தடிமையாகச் செல்வது வரை தனியார்மயம் - தாராளமயம் விவசாயிகள் மீது தொடுக்கும் பன்முகத் தாக்குதல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இதற்குக் காரணமான, ''இலவச மின்சாரம் ரத்து - மின் கட்டண உயர்வு; மானியம் ரத்து - உரம், பூச்சி மருந்து, விதை போன்ற உள்ளீடு பொருட்களின் விலை உயர்வு; தாராள இறக்குமதி'' போன்ற தாராளமய நடவடிக்கைகளை, தவறான பொருளாதாரக் கொள்கைகள் எனச் சுருக்கிப் பார்த்திவிட முடியாது. மாறாக, ஏகாதிபத்திய நாடுகள், உலக வங்கி - உலக வர்த்தகக் கழகம் வழியாக நமது நாட்டை மீண்டும் அடிமையாக்க - மறுகாலனியாக்க - நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்கள் என்றுதான் பார்க்க முடியும்.

தனியார்மயம் - தாராளமயத்தை முற்றிலுமாகக் கைவிடுவது; உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து வெளியேறுவது; ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்ட தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைப்பது - இவை மூலம்தான் இந்த மறுகாலனி ஆதிக்கத்தை முறியடிக்க முடியும். ஆனால், இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு எந்த ஓட்டுக்கட்சி தயாராக இருக்கிறது?

இதற்கு மாறாக, விவசாயிகளிடமிருந்து பறித்த சலுகைகளை மீண்டும் தருவது; விவசாயிகளுக்கு வங்கிக் கடன் வழங்க உத்திரவு போடுவது என்ற அற்பமான சலுகைகளைக் காட்டி, விவசாயிகளின் கோபத்தைத் தணித்து விட காங்கிரசு கூட்டணி ஆட்சி முயலுகிறது. ஏற்கெனவே நாம் குறிப்பிட்டது போல இது போலீசுக்காரனின் கருணை.

போலி கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்போடு காங்கிரசு கூட்டணி ஆட்சி காட்டும் இந்தக் கருணையை விவசாயிகள் புறக்கணிக்க வேண்டும். தாராளமயத்தை முறியடிப்பதற்கு இந்த ஓட்டுக் கட்சிகளை நம்புவதைவிட விவசாயிகள் தமது சொந்த பலத்தை நம்பியிருக்க வேண்டும்.

கர்நாடக மாநிலத்தில் நடந்த காங்கிரசு ஆட்சியில், விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக மின்கட்டணத்தை வசூலிக்க, ''புலிகேசி படை'' என்ற தனியார் குண்டர்படை அமைக்கப்பட்ட பொழுது, அதனை முறியடிக்க பெல்காம் மாவட்ட விவசாயிகள் ''சங்கொலி ராயண்ணா படை''யை அமைத்தனர். இந்தப் படை மின் இணைப்பைத் துண்டிக்க வரும் புலிகேசிப் படை குண்டர்களைத் துரத்தியடித்ததோடு, மின்சார வாரியத்தின் பில்களை நடுத்தெருவில் கொளுத்தித் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இது போன்ற கலகங்களில் விவசாயிகள் இறங்க வேண்டும். இந்தக் கலகங்கள் நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையில் ஒருங்கிணைக்கப்படும் பொழுது, மறுகாலனி ஆதிக்கத்தை எதிர்த்த போரில் இந்திய விவசாயிகள் வெல்வதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது!

(முற்றும்)

● ரஹீம்

www.padippakam.com

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

டைய வாழ்க்கை வசதியோ பலநூறு கோடி ரூபாய் சொத்து சுகங்களை உள்ளடக்கியது. கொங்கரார் ஸ்பின்னர்ஸ் வங்கிக் கடன் பெறுவதற்கு காங்கிரசு கட்சியின் ஜி.கே. மூப்பனார், ப.சிதம்பரம் ஆகிய உத்தமர்கள்தான் உடந்தையாக இருந்தனர்.

கொங்கரார் ஸ்பின்னர்ஸ் ஆலை முதலாளி பாலசுப்பிரமணியம், அத்தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மட்டும் எதிரானவன் அல்ல. வங்கி பொதுப் பணத்தைச் சுருட்டிக் கொண்ட சமூக விரோதி அவன்.

எனவே, தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை சம்பந்தப்பட்ட ஆலை வாயிலில் மட்டும் நடத்தாமல், போராட்டத்தை பகுதி பிரச்சினையாக வளர்க்க வேண்டும். அதற்கு, அவ்வட்டார மக்களிடம் கருத்து ரீதியாக ஆதரவை தொடர்ந்து திரட்ட வேண்டும். போராட்டத்தின் வளர்ச்சியில் பகற்கொள்ளையன் பாலசுப்பிரமணியத்தின் சொத்துக்களை நேரடியாகப் பறிமுதல் செய்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். இவற்றைச் சாதிக்க, சமரசமற்ற புரட்சிகரமான தொழிற்சங்கத்தை கட்டியமைக்கும் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் உடனடியாக இறங்க வேண்டும்.

– பு.ஜ. செய்தியாளர், கோவை

## காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவோம்! மைய அரசின் துரோகத்தனத்தை எதிர்ப்போம்!

# ஆகஸ்ட் 15–இல் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

**கா**விரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு கூறி பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தும், அதனைச் செயல்படுத்தாமல் தமிழகத்துக்குத் தொடர்ந்து துரோகமிழைத்து வருகிறது, மத்திய அரசு. பஞ்சாபில் சட்லெஜ் நதிநீர் பிரச்சினை தொடங்கியவுடனேயே, நான்கு மாநில முதல்வர்களையும் உடனடியாக அழைத்துப் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், காவிரி பிரச்சினையில் அக்கறை காட்டாமல் அலட்சியப்படுத்துகிறார். தொடர்ந்து தமிழகம் வஞ்சிக்கப்படுவதற்கும், காவிரி நதிநீர் பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பதற்கும் ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் ஆதாயம் மட்டும் காரணமல்ல; இந்திய அரசின் தேசிய இன ஒடுக்குமுறையும் காரணமாக உள்ளது. தமிழகத்தின் நியாயவுரிமை மறுக்கப்பட்டு, தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது.

காவிரி நதிநீர் பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பது ஒருபுறமிருக்க, மறுபுறம் நமது நாட்டு விவசாயம் தாராளமயக் கொள்கையாலும், பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளையாலும் நாசமாக்கப்பட்டுச் சீரழிக்கப்படுகிறது. இலவச மின்சாரம், விதை, உரம், பயிர்க் கடன் போன்ற நியாயமான உரிமைகள் பறிக்கப்பட்டு, விவசாயிகள் தற்கொலைக்கும் பட்டினிச் சாவுக்கும் தள்ளப்படுகிறார்கள்.

தேசிய இனங்களை ஒடுக்குவது, தேசிய இனங்களிடையே பகைமையைத் தூண்டி விட்டு நதிநீர் பங்கீட்டில் உள்ள நியாயவுரிமையைப் பறிப்பது, பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக்காக நாட்டையும் விவசாயத்தையும் நாசமாக்குவது என்கிற மக்கள் விரோத, நாட்டு விரோத வேலைகளைச் செய்து கொண்டே ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தை மத்திய - மாநில அரசுகள் கொண்டாடுகின்றன. இப்போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும் காவிரி நதி நீரில் தமிழகத்தின் நியாயவுரிமை நிலைநாட்டப்படவும் தஞ்சையில் கருப்புக் கொடி ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் நடத்த ம.க.இ.க. - பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் முற்பட்டன. இதனை அறிவிப்புத் தட்டிகள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் விரிவாகப் பிரச்சாரம் செய்தன.

ஆகஸ்ட் 15 தேசிய திருவிழாவாகக் கொண்டாடப்படுவதாகவும், எனவே கருப்புக் கொடி ஊர்வலத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் போலீசு எச்சரிக்கை விடுத்தது. இருப்பினும் போலீசின் மிரட்டல், அச்சுறுத்தலையும் மீறி, அறிவிக்கப்பட்ட இடத்தில் பெண்கள் - சிறுவர்கள் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கூடினர். போலீசின் கழுகுப் பார்வையில் மண்ணைத் தூவிவிட்டு, திடீரென கருப்புக் கொடிகளுடன் செங்கொடிகள், முழக்கப் பதாகைகளுடன் விண்ணதிர முழக்கமிட்டபடி கருப்புக் கொடி ஊர்வலத்தை நடத்திய தோழர்கள் ஆர்ப்பாட்ட இடத்திற்கு வந்தடைந்தனர். தடையை மீறி திடீரென ஊர்வலம் நடத்தியதைக் கண்டு பீதியடைந்த போலீசு, பெண்கள் - சிறுவர்கள் உள்ளிட்டு 84 தோழர்களைக் கைது செய்தது. அரசுக்கு எதிராகச் சதி செய்ததாக வழக்கை சோடித்து சிறையிலடைக்கவும் எத்தணித்தது. பட்டப்பகலில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசாரின் மத்தியில், பரபரப்பான கீழவாசல் கடைவீதியில் பெண்களும் சிறுவர்களுமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடி எப்படி அரசுக்கு எதிராகச் சதி செய்ய முடியும் என்ற சாதாரணக் கேள்வி, போலீசுக்கு உறைத்ததோ என்னவோ பின்னர், வழக்கை மாற்றிப் பிணையில் அனைவரையும் விடுவித்தது.

தடையை மீறி நடந்த இந்தக் கருப்புக் கொடி ஊர்வலம், புரட்சிகர அமைப்புகளின் போர்க் குணத்தை நிரூபித்துக் காட்டியதோடு உழைக்கும் மக்களிடம் போராட்ட உணர்வையும் விதைத்துள்ளது.

**தகவல்: ம.க.இ.க., பு.மா.இ.மு., தஞ்சை.**



www.padippakam.com




# வாசகர் கடிதம்

● உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று பீற்றிக் கொள்ளப்படும் இந்தியாவில், இந்திய இராணுவத்தின் காமவெறியும் கொலைவெறியும் அடக்குமுறையும் தலைவிரித்தாடுவதை அட்டைப்படமும் கட்டுரையும் எடுப்பாக உணர்த்தின. இந்தக் கொலைகார இராணுவத்துக்குத்தான் பட்ஜெட்டில் பல்லாயிரம் கோடிகளை ப.சிதம்பரம் வாரியிறைத்துள்ளார். குடந்தையில் தீயில் கருகி மாண்ட குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்துவதாக மனிதாபிமான விளம்பரத்தில் ஓட்டுக் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டிருந்த வேளையில், புரட்சிகர அமைப்புகள் தனியார் கல்விக் கொள்ளைக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டங்கள் போராட்ட உணர்வூட்டுவதாக அமைந்துள்ளன.

*- வாசகர் வட்டம், கடலூர்.*

● ஆகஸ்ட் இதழில் வெளியான ''இதுதான் இன்றைய இந்தியா''வின் செய்தியும் படங்களும் நாடு இருவேறு உலகங்களாகப் பிளவுபட்டுள்ளதை எடுப்பாக உணர்த்தியது. தனியார்மயமும் தாராளமயமும் மேட்டுக்குடியினருக்குச் சாதகமாகவும், கோடானுகோடி குழந்தைகளைக் கொத்தடிமைகளாக்கியுள்ளதையும் உணர்ச்சியோடு சித்தரித்துக் காட்டுகிறது.

*- சுடர், மதுரை.*

● தன்மானத் தளபதி, சுயமரியாதை சிங்கம் என்றெல்லாம் சித்தரிக்கப்பட்ட ஜார்ஜ் பெர்னாண்டஸ், எத்தகையதொரு ஏகாதிபத்திய அடிமை என்பதை அமெரிக்காவில் நடந்த ஆடை அவிழ்ப்பு விவகாரம் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. அமெரிக்காவின் இந்த எஜமானத்தனத்துக்கு இந்திய நாடாளுமன்றம் கூட கண்டனம் தெரிவிக்காமலிருப்பது, அதன் அடிமைத்தனத்தை நிரூபித்துக் காட்டுகிறது. ''மாற்றுப்பாதையில் அமைந்துள்ள பட்ஜெட்'' என்று போலி கம்யூனிஸ்டுகள் துதிபாடும் வேளையில், நாட்டை மீண்டும் காலனியாக்கும் பா.ஜ.க.வின் பாதையிலிருந்து காங்கிரசின் கொள்கை வேறுபட்டதல்ல என்பதைப் புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டு பட்ஜெட்டை விளக்கிய கட்டுரை சிறப்பாக உள்ளது. புரட்சிகர அமைப்புகளின் போராட்டச் செய்திகள் உற்சாகத்தோடு உணர்வூட்டுபவையாக அமைந்துள்ளன.

*- வாசகர் வட்டம், கோவை.*

● தனியார் வங்கிகளில் கடன்களை வசூலிக்க அடியாள் படை வைத்திருப்பது போல, கர்நாடகாவில் காங்கிரசு ஆட்சியாளர்கள் விவசாயிகளிடமிருந்து மின் கட்டணத்தை வசூலிக்க ''புலிகேசி படை'' என்ற குண்டர் படையை நிறுவி, விவசாயிகளை அச்சுறுத்தி தற்கொலைக்குத் தள்ளியுள்ளார்கள் என்பதை அறிந்த போது பெரிதும் அதிர்ச்சியடைந்தேன். விவசாயிகள் தற்கொலை பற்றிய தொடர் கட்டுரை, அடுத்தடுத்து பல உண்மைகளையும் விவசாயிகளின் அவலத்தையும் முழுமையாகத் தொகுத்தளிக்கிறது.

*- தியாகராசன், புலிவலம், திருவாரூர்.*

● பொடா எப்படி கடுமையான சட்டமோ அப்படித்தான் இராணுவத்துக்குக் கொடுத்துள்ள சிறப்பு அதிகாரச் சட்டமும் கடுமையானது, கொடுமையானது என்பதை அட்டைப்படக் கட்டுரை உணர்த்தியது. கம்யூனிச ஆதரவாளராக மாறிய வில்லியம் ஹிண்டனைப் பற்றிய கட்டுரை உற்சாகத்தை அளித்தது. கம்யூனிசத்தை அனுபவத்தால் உணர்ந்தால், அது யாரையும் மாற்றிவிடும், சாதனையாளனாக்கும் என்ற உண்மையையும், நமது நண்பர் மறைந்து விட்டாரே என்ற வருத்தத்தையும் இக்கட்டுரை ஏற்படுத்தியது. இது போன்ற செய்திகள் மாதா மாதம் வருவது பயனுள்ளதாக இருக்கும்.

*- வாசகர் வட்டம், திருச்சி.*

● நான் 1999 தொடங்கி 2001 வரை மணிப்பூரில் இராணுவப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தேன். மணிப்பூர் மக்களின் போர்க்குணம் இப்போதுதான் வெளியே தெரிய வந்துள்ளது. ஆனால், நீண்ட நெடுங்காலமாகவே அவர்கள் போர்க்குணமிக்கவர்கள். மார்ச்'99-இல் பஞ்சாப் ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு சிப்பாய், ஒரு இளைஞனைத் தாக்கி வதைத்ததை அறிந்ததும் அம்மாநிலமே போராட்டத்தில் குதித்தது. உள்துறை அமைச்சகமும் பஞ்சாப் ரெஜிமெண்டின் தளபதியும் வருத்தம் தெரிவித்து, அச்சிப்பாய்க்கு தண்டனையளிக்க உத்தரவிட்ட பிறகே போராட்டம் ஓய்ந்தது. இதுபோல், 2000-மாவது ஆண்டில் இராணுவத்தின் அத்துமீறல்களுக்கு எதிராக மணிப்பூர் மக்கள் உறுதியுடன் போராடினர்.




இங்கே நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், போலீசு என்றாலே அஞ்சி ஒடுகிறார்கள் பிற மாநில உழைக்கும் மக்கள். ஆனால், போலீசையும் இராணுவத்தையும் துணிவாக எதிர்த்து மணிப்பூர் மக்கள் போராடுகிறார்கள். இத்தகைய போர்க்குணம் மணிப்பூர் பத்திரிகையாளர்களிடமும் நிரம்பியுள்ளது. போராளிகளுக்கு ''சந்தா'' கொடுத்ததற்காக ''இம்பால் ஃப்ரீ பிரஸ்'' என்ற பத்திரிகையைத் தடை செய்து அரசு உத்திரவிட்டது. அதற்கெதிராக மணிப்பூரின் அனைத்துப் பத்திரிகைகளும் ஒன்றிணைந்து போராடியதோடு, அரசும் இராணுவமும் போராளிகளின் நிர்பந்தங்களுக்குப் பலமுறை பணிந்து சென்ற சம்பவங்களைப் பட்டியலிட்டு அம்பலப்படுத்தின. பீதியடைந்த அரசு, அப்பத்திரிகை மீதான தடையை விலக்கிக் கொண்டது.

மணிப்பூர் மக்கள் எளியவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள். இவர்கள் பல்வேறு இனக்குழுக்களாகப் பிரிந்துள்ள போதிலும், இராணுவ அடக்குமுறைக்கு எதிராக ஐக்கியப்பட்டு போராடுகிறார்கள். இதேபோல, பல்வேறு போராளி குழுக்கள் இங்கு செயல்பட்டாலும் இராணுவ அடக்குமுறைக்கு எதிராக ஐக்கியப்பட்டுப் போராடுகின்றன. மது, போதை மருந்து, ஆபாச சினிமா, கோக் - பெப்சி முதலானவற்றைப் போராளிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தடை செய்துள்ளனர். ஆனால், இவை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தாராளமாகக் கிடைக்கும். போராளிகள் துப்பாக்கி ஏந்துவதோடு நின்று விடுவதில்லை; மக்களை அரசியல்படுத்தி அமைப்பாக்குகிறார்கள்; அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு வழிகாட்டி உதவுகிறார்கள். இதனால், போராளிகளுக்கு மக்களிடம் செல்வாக்கு உள்ளது. இந்திய இராணுவமோ, போராளிகளை ஒடுக்குவது என்ற பெயரில், மக்கள் மீதே அடக்குமுறையை ஏவி முற்றாகத் தனிமைப்பட்டுப் போயுள்ளது. இந்திய இராணுவத்தை வெளியேற்றாமல், தற்காலிகமாக சில நடவடிக்கைகளை எடுத்து மணிப்பூர் மக்களின் போராட்டத்தைச் சாந்தப்படுத்தி விட முடியாது. ஏனெனில் மணிப்பூர் மக்களின் மிகப் பெரிய எதிரியாக இந்திய இராணுவம் இன்று மாறிவிட்டது.

*- பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய இராணுவச் சிப்பாய்.*

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

படிப்பகம்

# இதுதான் இன்றைய இந்தியா



பார்ப்பன - பாசிச ஜெயாவின் காட்டு தர்பாருக்கு இந்தப் படம் இன்னுமொரு எடுத்துக்காட்டு. 'மார்க்சிஸ்டு' கட்சியின் மாணவர் அமைப்பான இந்திய மாணவர் சங்கத்தினர் "கல்விக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்" என்பது உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகளைப் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் மனுவாகக் கொடுக்க முயன்ற பொழுது, அவர்கள் மீது விழுந்து குதறியது ஜெயாவின் போலீசு பட்டாளம். முருகன் என்ற போலீசு துணை ஆய்வாளர், மாணவர் சங்கத் தலைவர் செல்வா, துணைச் செயலாளர் வெண்மதி ஆகிய இருவரையும் கடுமையாகத் தாக்கியதோடு, அவர்கள் இருவரையும் வெறிநாயைப் போலக் கடித்து, போலீசு என்பதே ஒரு ஆட்கொல்லி மிருகம் என நிரூபித்தார். இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்துக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய பின், தாக்கிய போலீசாருக்கு "ஸ்டேசன் மாற்றம்" என்ற மாபெரும் தண்டனையைக் கொடுத்தது ஜெயா கும்பல்.

கல்வி தனியார்மயமாக்கப்படுவதை, வியாபாரமாக்கப்படுவதை மாணவர்கள் எதிர்த்தால், ஏதோ தனது சொத்தே பறிக்கப்படுவது போல பதறிப் போகிறார், ஜெயா. ஜெயாவிற்கு வரும் இந்த ஆத்திரமும், ஆணவமும் அநீதி என்றால், மே.வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'களுக்கு வரும் போது நீதியாகி விடுமா?

தனியார்மயக் கல்விக் கொள்கையையும்; பாடப்புத்தகங்கள் கிடைப்பதில் நிலவும் தட்டுப்பாட்டையும் கண்டித்து, மே.வங்க மாநிலத் தலைநகர் கொல்கத்தாவில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாணவர் அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்தான் இந்தப் படம். 'மார்க்சிஸ்டு' கட்சி தலைமையில் உள்ள இடதுசாரிக் கூட்டணி ஆட்சி, ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. மாறாக, போலீசை இறக்கி விட்டுத் துரத்தியடித்தது.

ஜெயாவின் கையில் உள்ள போலீசு சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர் சங்கத்தினரைத் தாக்கியது காட்டுமிராண்டித்தனம் என்றால், 'மார்க்சிஸ்டு'களின் கையில் உள்ள போலீசு, கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களைத் தாக்கியது சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்கவா? தமிழகத்தை ஆளும் ஜெயா கும்பல் கல்வியை வியாபாரமாக்கி வருவது மக்கள் விரோதப் போக்கு என்றால், அதே தனியார்மயத்தை மே.வங்கத்தில் 'மார்க்சிஸ்டு' அரசு புகுத்தும்பொழுது, தலைகீழாக மாறி விடுமா? இந்திய மாணவர் சங்கத்தினரே, இந்த முரண்பாட்டுக்கு நீங்கள் மழுப்பாமல் பதில் சொல்லியே தீர வேண்டும்.

இடதுசாரிக் கூட்டணி ஆட்சி நடக்கும் மே.வங்கத்தில் தனியார்மயத்தை ஆதரிப்பது; எதிர்க்கட்சியாக இருக்கும் மாநிலங்களில் தனியார்மயத்தை எதிர்ப்பது என்று மார்க்சிஸ்டுகள் போடும் இரட்டை வேடத்திற்கு இது போல நூறு உதாரணங்களைத் தரலாம். ஓட்டுப் பொறுக்குவதற்காகத் தனியார்மயத்தை எதிர்ப்பதாக நாடகமாடும் மற்ற ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதத்தை விடப் போலி கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதம் அபாயகரமானது; ஏனென்றால், இவர்கள் சிவப்புக் கொடியைப் பிடித்துக் கொண்டு, தொழிலாளர்களையும், மாணவர்களையும் நைச்சியமாக ஏய்த்து வருகிறார்கள்.

இந்த நயவஞ்சகத்திற்கு உழைக்கும் மக்கள் பலியாகி வருவது இனியும் தொடரத்தான் வேண்டுமா?

